596

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

இராமாயணக் கும்மி

இஃது

வானமாமலை-அரங்கநாயகி அம்மாளால்

இயற்றப்பட்டு

OFFICE

...மாளால்

...பட்டது

...7 [விலை அணு 5

ഠ-, 1MA57, R
M27.
128245

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

இராமாயணக் கும்மி

இஃது

வானமாமலை- அரங்கநாயகி அம்மாளால்

இயற்றப்பட்டு

லக்ஷ்மி அம்மாளால்

வெளியிடப்பட்டது

ரைட்] 1927 [விலை அணா 5

வானமாமலையில் எழுந்தருளியிருக்கும்

ஆசார்யர் கலியன் ஸ்வாமிபேரில் பாடிய

பல்லாண்டு.

இராகம்—பூபாளம்.

பல்லாண்டு பல்லாண்டு பரம ஹம்ஸ
ஸத்குருநாத சதகோடி பல்லாண்டு
கல்லாண்ட நின்திரு கழலிணை ஸதகோடி (1)

தொண்டர் குழாங் கள்கும் நீர்தோணும் விழாவுக்கும்
கண்டகர் நடுங்கும் வெங்கந லாழியானுக்கும்
மண்டிய போரில் முழங்கும் வெண் சங்குக்கும்
கொண்டல் நிறத்தநின் கோமன மேனிக்கும் (2)

மல்லரை ஜெயித்த நின் மார்புக்கும் தோளுக்கும்
புல்லரை யழித்த நின் போருக்கும் பேருக்கும்
என் அல்லலை யொழித்த உன் அன்புக்கும் பண்புக்கும்
பல்லாயிரம்கோடி படைத்தநின் நடத்தைக்கும் (3)

அழகிய திருமுடி அருள்மலர் விழிக்கும்
குழகிய குளிர்திரு பவழவாய் மொழிக்கும்
பழகிய நடைக்கும் நல் பீதக உடைக்கும்
படுக்கைக்கும் நடக்கைக்கும் இருக்கைக்கும் திருக்கைக்கும்(

(வானுத்ரயோகீநம:)

ஸ்ரீ

ஸ்ரீஸத் குருபாதம் துணை.

ஸ்ரீமத் ராமாயணக் கும்மி

வாணிவாராய் என்னுவில்—என்ற மெட்டு.

மங்கையருள் புரிவாய் ஸ்ரீ வர மங்கை யருள் புரிவாய்
மங்கையருள் புரிவாய் எங்கும் புகழ் ராம கதை
இங்கித மாகவே இங்கு உரைத்திட. (1)

பூபதி குமாரனைப் புவியிலவதரித்த
மாபதி சரிதையை மண்ணினி லுரைத்திட. (2)

தொடரும் வீணை விலக திருவாய்மொழி பாடும்
சடகோபர் எதிராஜர் சரணம் பணிந்துரைக்க. (3)

பிள்ளைத் தமிழ் பாடும் மல்லிநாட்டாருடனே கொல்லி
மன்னன் மழிசை கோமான் பதம் பணிந்து. (4)

திருமொழியோட மலனாதியும்பாடிய பரகாலர்
பாணர்தம் பதம் பணிந்துரைத்திட. (5)

சூடிகொடுத்தவளும் தொண்டரடிப்பொடியும்
பாடும் மதுரகவி பதம் பணிந்துரைத்திட. (6)

பொய்கை பூதன் பேயர் புகழும் பஞ்சாயுதமும்
ஐயன் சரித்திரம் சொல்ல அனுக்கிரஹம் செய்ய வர. (7)

வையகம் புகழ்ந்திடும் வானமாமலை மேவும்
தெய்வநாயகன் திருதேவி நீ கிருபை செய்து. (8)

2-வது வந்தனம் தந்தேன்.

கமலையே வாராய் கருணை நீதாராய்.
விமல நாதன் சரித்ரம் தன்னை விஸ்தரித்துரைத்திட
கவலையொன்று மில்லாமலே கார்த்திடுவாய் நீ தாயே. (1)

அன்ன ஊர்தியார் தமக்கு அன்புடைய நாயகி
பின்னமொன்று மில்லாமலே பிரீதியாக கார்த்திட. (2)

பூபதி தசரதனும் புத்திரகாமேஷ்டி செய்ய
மாபதி யவதரித்த வண்மையை வழுத்திட. (3)

3-வது திருநீலகண்டன் சரித்திரம்.

ராமச்சந்த்ரன் சரித்திரம் அவன்
சரித்திரம் வெகு விசித்திரம்—ஸ்ரீ
பூமானும் தசரதன் செய்த
புத்திர காமேஷ்டியா லுதித்த—ஸ்ரீ. (1)

செங்கமலப் பதத்தூள் படிய
சிலையும் பெண்ணாகி நெடிய
சங்கரன் சாபமும் தான் ஓடிய
லங்கையரக்கர் குலம் மடிய வந்த. (2)

மராமரா வென்றுரைத்த
வனவேடனுக்கும் வீடளித்த
சராசரன் அதிகீர்த்தி பெற்ற
தசரதன் மகனா யுதித்த ஸீதா (3)

நினைக்க மனதிற் கினிப்பளிக்கும்
உரைக்க நாவினில் தேன் துளிக்கும்
சினத்தவர் மனதும் களிக்கும்
செப்பினவர்க்கு வீடளிக்கும் ஐய.

அறிந்தும் அறியாததும் சிறியேன்
அறைந்தேன் யாதும் பிழை யறியேன்
அறிந்தவர்கள் பிழை பொறுப்பீர்
அன்புளங்கொண்டு அனுக்ரஹிப்பீர் ஐய. (5)

4-வது எல்லவரும் கூடி.

தேவர்களும் கூடி சிந்துவினில் நாடி
ராவணன் தன் இம்ஸையினுல்
தேவர்கள் மனம் வருந்தி
ஆவினங்கள் கார்த்த எங்கள்
ஐயனை ஸ்துதிக்க லுற்ருர் (1)

கல்லையும் பெண்ணுக்கி வைத்தாய்
கம்ஸனுயிர் போக்கி வைத்தாய்
வல்லவுணன் மார்பிளந்தாய்
வஞ்சகமாய் மண்ணளந்தாய்
எல்லையினில் ராவணன் செய்
ஹிம்ஸைதனை தீர்த்திடவே
வல்லியுடன் கூடவிங்கு
வாரும் குறை தீருமென்ருர். (2)

விண்ணவர் துதித்தார் கண்ணனும் களித்தார்.
அஸுரர்கள் இடுக்கணினுல் அமரரே ரஞ்சவேண்டாம்
அன்புடனே உங்கள்பதி இன்பமுடன் சேர்ந்திடுங்கள்
தசரதன் யாகத்துதித்துத் தம்பியர்கள் மூவருடன்
வசைபொழியும் அஸுரர்தங்கள் வல்லுயிரை நீக்கிடவே
வந்தவ தரிப்போம் சிந்தைதுயர் தீர்ப்போம் (3)

வானரங்கள்போ லுருவாய் கானகத்தில் சென்றிருங்கள்
மாண்டாய் நாம்பிறந்து வந்துஜெயம் தந்திடுவோம்
ஹரியா விதம் விண்டார் அரியுருவம் கொண்டார் (4)

5-வது கண்டாளே ஸீதை.

அரும்புநகையா ரணங்கே அறிகுவாயடி
கரும்புமொழிக்காரிகையே கழருவேனடி நானே (1)

இன்னிலம்புக ழயோர்த்தி யென்ற நகர்தனில்
தன்னேரில் தசரதன் தகைமையா யாண்டான் பெண்ணே (2)

தெரிவையர்கள் அறுபதாயிரம் தேவியர்சூழ
அறுபதாயிரம் வருஷம்மன்னன்
அன்புடனாண்டான் பெண்ணே (3)

எத்தனை ஸம்பத்திருந்தும் புத்ர னில்லாமல்
சித்தம் வருந்தி மன்னன் ஸுத்தனிருக்கும் நாளில் (4)

மந்திரியை தானழைத்து மன்னன் விள்ளுவான்
மைந்தன்குறை தீரவரம் வகையாய்ச் சொல்லுவா னப்போ (5)

6-வது மங்கையரே காணே னடி.

மன்னவ னுரைத்திடவே மந்திரியப்போ ஸுமந்திர னப்போ
பின்னமில்லா வார்த்தையினல் மன்னவன் மனம் களிக்க
வன்னமணி மாலையணி மந்திரிசொல்வான்
ஒரு தந்திரம்விள்வான் (1)

குலமுனி வஸிஷ்டர் தன்னால் கலைமுனியைத்தா னழைத்து
புலவர் புகழ் யாகம் செய்தால்
புத்ரன் பெறலாம்—முத்திசேரலாம் (2)

பூபதிமனமகிழ புத்திர காமேஷ்டி செய்ய
ஆவலுடன் வஸிஷ்டர் தமை
அன்போ டழைத்தான் அன்பின் மிகுத்தான் (3)

கேட்டுமந்த முனிவர்கலைக் கோட்டு முனியை அழைத்து
நாட்டமுடன் யாகம் செய்ய
நாடிகூடினர் கொண்டாடிப் பாடினர் (4)

7-வது கப்பம்-முத்திரெறி.

இந்தவிதம் யாகம்செய்ப எல்லவரும் ஒருமித்தார்
அந்தமுடன் வேதிகைகள் விந்தையுடநே அமைத்தார் ()
சாந்துகொண்டு தரைமெழுகி சந்தணத்தால் கோலமிட்டார்
வேந்தன்மனம் மகிழ்வுறவே வேதிகையில் ஓமம்செய்தார்.
ஸுமுகர்களும் கூடிக்கொண்டு சுத்தமதாய் யாகம் செய்ய
அமுதங்கொண்டு பூதமொன்று அக்கினியில் தோன்றி
வாங்கியந்த பாயஸத்தை மன்னவனும் மனமகிழ்ந்து [டவே.
பாங்கியர்கள்சூழ்ந்திருக்கும் பாவையர்கள்கைகொடுத்தார்.
நான்குபிரி வாகவைத்து நங்கையர்கள் மூவருக்கும்
தேன்மொழியாள் கௌசலேக்கி செல்வனொரு பாகம் தந்
கன்னல்மொழி மாதரிசி கைகைகொண்டாள் ஒருபாகம் [தான்
இன்னுமிரு பாகம்தனை ஈந்தனனே ஸுமத்திரைக்கு.

8-வது கிளி கண்ணி.

சங்கு சக்ர சேஷனென்னும் தம்பியர்கள் மூவருடன்
அங்கமலக் கண்ணனெங்கள் ஐயனும் அண்டர்
துன்பந் தீர்க்க வந்துதித்த மெய்யனும். (1)

சித்ரை நவமி கடகம் செழும் புனர்ப்பூசம் தனிலே
ஒத்தகிரகங்கள் பொருந்தும் நாளையில் எங்கள்
உத்தமன் உதித்தானந்த வேளையில் (2)

அன்னதானம் ஆடைதானம் பொன்னின் தானம் பூமிதானம்
இன்னுமுள்ள தானங்களும் செய்தனர் எங்கும்
பொன்னின்பூவால்மாரிபோலப் பெய்தனர். (3)

மன்னவர் ஆநந்தமேவ விண்ணவர் பூமாரி தூவ
மன்னன் வஸிஷ்டர் வதனம் நோக்கியே மன
மின்புறவே இன்னல் யாதும் போக்கியே (4)

மாமுனியே மைந்தருக்கு நாமகரணம் செய்யு மென்ன
ராமன் பரதன் லக்ஷ்மணன் என்றுமே இள
நங்கை மைந்தன் சத்ருக்னன் என்றுமே . (5)

ஆதரவாய் மைந்தருக்கு ஜாதகர்ணம் செய்திடவே
கோதையர் அரண்மனையில் கூடினர் எங்கள்
மாதவன் வடிவினைக் கொண்டாடினர். (6)

9-வது கோபியர்கள் கோகுலத்தில்

மாதர்க ளரண்மனையில் மகிழ்ந்து கூடினர்
ஆதரவாய் ராகவன் தன் அழகைப் பாடினர். (1)
கோதையரே பாரடியோ மாதவன்தன்கு ழலழகை
ஸ்ரீதரன்வில்நுத லழகைச் செவ்வியரே பாருமென்று. (2)

வாரிஜம்போல் கண்ணழகைக் கூறியதோர் நாசியெழில்
மாதே பாரடி கோதே ஓரடி
சீறிய செம்பவள இதழ் தேன்மொழியே நேரடியோ
நாரியே வெண் முருவல் கிணை ஞாலத்தில்லை வேரடியோ
வலம் புரிநேர் கழுத்துக்கிணை மண்ணி னிலுண்டோ
வரைமருவு புஜத்துக்கிணை மங்கையே கண்டோ
நலம்புரியும் மார்புக்கிணை நங்கை யெங்கும் கண்டதுண்டோ
நளினமலர்க் கரத்துக்கிணை நானறியே னென்றுரைத்தே.

அரைவட மொலிக்கு மிடை யழகையென சொல்வேன்
அம்புயனை யீன்றமலர் உந்தியை விள்வேன்
கரிதுதிக்கைத் துடைய ழகும் கஞ்சமலர்ப் பதத்தழகும்
மதகரியின் நடை யழகும் மண்ணிலெங்கும் காணோன்று.

10-வது ஆதிசிதம்பரத்தே.

இந்தவிதம் புகழ்ந்தேமாதர் உகந்துதிருஷ்டிகழித்து
அந்தமாய் தொட்டிலிட்டு மைந்தரை அன்புடனே வளர்த்தார்

கொஞ்சிவிளை யாடிமைந்தரிள வஞ்சியர்கள் மடியில்
அஞ்சுவயதாகி குருவிடம் அப்யஸித்து வந்தார்.

மன்னன் மனமகிழ்ந்து பாலரை பின்னமொன்றில்லாமலே வை
கண்ணின் மணியதுபோல் பிரிதியாய் காத்துவந்தார். (3) [த்து
அன்னையர் கண்டுகந்துமைந்தரை அணைந்துஉகந்துகொண்டார்
பின்னவன்லக்ஷ்மணனோ டிராவகன் பிரீதியாய்ச்சேர்ந்திருந்தார்.

(சரி சரி போதும் நீ புத்தி-11-வது அய்யா பீஷ்ம)

இப்படி தசரதன் இருந்திடும் நாளையில்
எடுத்துரைப்பேன் மானே
செப்பமுள்ள கௌசிகன் சிரசினில் ஜடையுடன்
அப்போ மன்னன் சபையில் அருந்தவன் தோன்றினன்.

கையினில் கொய்த சமித்துடன் கூடவே
கடுஞ்சினப் பார்வையுடன்
மெய்யினில் நாமமும் விளங்கு பொற் பூணுலும்
ஜபமுற அயோத்தி அரசன் முன்வந்தான்.
வந்த மகா முனியை மன்னனடி வணங்கி (2)

எந்தையே யென்று போற்றினன்
அந்தமுனி மன்னனுக் காசிகள் கூறியே
மைந்தர்கள் சுகமோவென்றான் மானே.
யானொருயாகம் செய்ய ராக்ஷஸரிம் ஸையினல் (3)

கோனே வருந்தினேனேமான பூஷணனே உன்மைந்தன்
மகிழ்வுடனனுப்பிடுவாய் ராகவன்தனை மன்னா (4)

12-வது பஞ்சவரொடு சேதி.

கோசிகன் உரைக்ககேட்டு கொற்றவனும் சொல்லுவான்
நாசம்செய்யும்அரக்கரைவெல்லநான்வாரேனென்றுவிள்ளுவான்
பால்மணமறு பாலகநுந்தன் கோளரி அடர்ந்த காட்டில்
பகைவர் தங்களை வெல்லவோ குருவே உம்முடன் செல்லவோ

அருந்தவம் செய்து பெற்ற ராமனை
அடர்ந்தகாட்டினில் விடுப்பேனோ
அருந்தவமுனியே உன் கையினில்
அகந்துணிந்து நான் கொடுப்பேனோ. (3)

செய்ய பஞ்சணை மீதுலாவு என் செல்வராமனைத் தருகவோ
செய்யாமாயை செய்யரக்கரை ஜெயித்துராகவன்வருகவோ. (4)

படைகளுடனே நான் வந்து உன் பகைவரை நீராக்குரேன்
ஜடைதரித்தவனே உன்யாகத்தை சங்கையில்லாமல்கார்க்கிறேன்

13-வது ஆரடி நீ பெண்ணே.

ராஜன் சொல்லுகந்து கோசிகன் சினந்து
பேசிடுவார் மன்னன்மனம் கூசிட முனிந்து. (1)

மன்ன என்ன சொன்னாய் மாமுனி யென்முன்னாய்
உன்னிட திடமறிவேன் உகந்துபார் நன்றாய் (2)

தேவர் துயர் ஏக ஸ்ரீதரன் உன்யாக
மேவிவந்தான் ராவணன் தன் ஆவியதுபோக (3)

ஜடைதரித்த நானே உன் தனயனறிவேனே
ஜல்தியில் ராகவ நீதந்திடாய் சீமானே. (4)

கோசிகர் வெகுண்டார் குரு வசிஷ்டர் கண்டார்
மோசம் வாராதென்று முனி ராஜனுடன் விண்டார் (5)

14-வது போவோம் வாடி.

வாசிஷ்டனுரைத்த வார்த்தை மன்னனும் கேட்டுமப்போ
கோசிக னடிபணிந்து கோபந்தணிந் தேதுரைப்பார் (1)

மாமுனியே யெந்தனுட வார்த்தையைப் பொறுத்தருள்வீர்
ராமனைத் தம்பியுடனே நாடிநீரழைத்துச் செல்வீர் (2)

மன்னன் சொல் மொழியுகந்து மாமுனி மனமகிழ்ந்து
பின்னவனோ டிராகவனை ப்ரீதியாயழைத்துச் சென்று. (3)

காடு செடி தாண்டி யாக சாலையினில் வந்துகந்தார்
தாடகையைக்கண்டு ராமன் யாரெனவினுவி நின்ருன் (4)

ஆலம்போன்ற தாடகையென் றருந்தவ முனியுரைக்க
கோலாகலச் சிலைவளைத்து கொடுங்கணை பொழிந்து நிற்க

15-வது லோகஸக்யமானவனே.

தாடகையை வென்றுமெங்கள் தாசரதிராமன்
தண்ஙவத்தாமன் நாடித்தம்மையோடு யாகசாலை வந்தான் பூமன்
யாகம் செய்ய எத்தனிக்க ராக்ஷஸர்கள் கூடி நாசம் செய்யநாடி
ராவகனைத் தேடியமர் செய்திடவே ஓடி (2)

வந்தமர்செய் ராக்ஷஸரை மாதவனும்கண்டுசிந்தைமகிழ்கொண்டு
ஸந்தோஷமாய் கோதண்டத்தை தன்கரத்தில் கொண்டு(3)

பாரியஸுபாகுமாலி படைகலங்கச் சென்று
பகைவர்தம்மை வென்று—மாரீசனைக்
கடற் கரையில் மயங்கச் செய்தான் அன்று (5)

மோசம் செய்யும் அரக்கர்களை நாசம் செய்து நீதன்
நேசருக்கருள் போதன் கோசிகன் யாகம்முடிதான் கோகனகை

16-வது கும்மியடி பெண்கள். நாதன்(5)

கோசிகன் செய்தயாகம் முடித்து
கோசலை ராமன் மனங்களித்து
நேசமாய் கௌசிகர் தம்பியுடன்கூட
கேசவராமன் மகிழ்ந்திருந்தார் ஜெக
தீசன் மனதில் உகந்திருந்தார் (1)

இந்தவிதம் பர்ணசாலையிலே சிந்தைமகிழ்ந்திவர் களிருக்க
அந்தமுடனேமிதுலையிலேஒருவிந்தைநடந்ததைச்சொல்கிறேன்
அப்பதி ராஜன் ஜனகனுக்கு மெய்தவத்தாலொரு பெண்பிறந்து
மைப்படி கூந்தல் ஜனகி யென்னும் பெயர்
வாய்ந்து வளர்ந்துவரும் நாளில், (3)

நந்தவனத்தில் தோழிகளுடன் பந்து எறிந்து விளையாட
அந்தரம் தன்னிலே பந்ததுகாணுமல் ஆச்சரியமாகப்போச்சுதடி
சேடியரேபந்தைக்காணேனடி தேடினேன் எங்கும்தோணேடி
வஞ்சிய ரப்போ மனம்கலங்கி வைதேஹியண்டையில் வந்து சொல்ல
வஞ்சியிடைச் சீதை மாதரோடெங்கிலும் வாடுகிருள் பந்தைத் தேடுகிருள்

சேடியரே பந்தைக் காணேனடி
தேடினே னெங்கிலும் தோணேனடி
நாடிச் சிவசாபம் வைத்த விடந்தன்னில்
நான் சென்று தேடுறேன் வாருங்கடி

17-வது பட்டணங்களில் சிறந்த நல்ல

ஜனகனுக்கு முன்னெருநாள் சங்கரனேர் சிலைகொடுத்தான்
ஜனகியந்த சிலையடியில் தன் கரத்தால் தேடலுற்றுள் (1)

அறுபதினுயிரம் பேர் சுமக்கும் அந்த வில்லை ஜானகியும்
ஒருகையினுல் தானெடுத்து உகந்துபந்தை எடுத்துச் சென் [றுள் (2)

பார்த்திருந்த சேடிகளும் பார்த்திபன் ஜனகனிடம்
பரப்பரப்பாய் ஓடிவந்து பாவையருரைத்தனரே. (3)

ஜனகன் ஸீதையை யழைத்து. இத்தனுவிணைக்லுடித்தவர்கென்
தன் மடியில் வைத்துகந்து ஜானகியை யீவேனென்று (4)
தேசமெங்கும் பந்தலிட்டு, மாசற்ற ஜனக மன்னன்
ராஜர்களை வரவழைத்து. மனமகிழ்ந்திருந் தனனே. (5)

18-வது. தவிழ்ந்து விளையாடும்.

சேதிதன்னை கேட்டு கௌசிகனும் சிந்தைதனிலே மகிழ்வடைந் [து
ஸீதையை நன்மண மாலை சூட்டிடவே
ஸ்ரீ ராகவனை யழைத்து வரார் (1)

செல்வனும் கானகத்தில் நடக்க-ஒரு
கல்லினில் பாததூளி அடிக்க
எல்லையில் கௌதமனிட்ட சாபம்தீர
ராகவன் முன்னே யகல்யை நின்றாள். (2)

கோதமன்பாரி க்கருளளித்து எங்கள்
கோதண்டராமன் மனம் களித்து
மாதவர் கௌசிகர் தம்பியுடன் கூட
மாயன் மிதிலையில் சென்றாரடி (3)

வந்த முனிவனை மன்னன் கண்டு
சிந்தை மகிழ்ந்தெதிர் கொண்டுகந்து
இந்த மைந்தர் யாவரென்று விட
அந்த முனியும் உரைப்பானடி. (4)

19-வது வாரிதுனவன ஜோபனு.

மன்னுகேளும் மகிழ்ந்து நாளும்
அன்ன வயல்சூழும் அயோத்தியை யாளும்
மன்னன் தசரத புத்ரன் நால்வரில் மன்னிய சீர்குண ஸுத்தன்
பன்னிருயுகமாகப் பாரில் தவம் செய்தாலும்
எண்ணரியா ஹரிநித்தன். (1)

நேசமுடனுக வாசவனுக்காகப் பேசியே மண்ணிரந்தவன் இவன்
தாஸர்க்கருள் புரிந்தவன் நீ பூஜை செய்தாலும் உன்னை
நேசங்கொள்ளான் சீதை ஆசையாலிங்கு வந்தவன் (2)
தாடகையை வென்றான் மாலியையும் கொன்றான் [யாய்
நீடுவேள்வி நிறைவேற்றினான் காடுதனில் கல்லுருவை கன்னி
மாற்றினான்-உன் கார் முகத்தைத் கண்டிட வந்தான். (3)

20-வது நோட்.

கோசிகன் சொன்ன மொழி யுகந்து
ராஜன் ஜனகன் மனமகிழ்ந்து

நேசமுடனே சபைதன்னி லழைத்துப்
        பாசுபதன் சிலையை யெடுத்து ராஜசபைநடுவே
பார்த்திபன் வைத்திட ராஜ-சென்று
        ராஜர்கள் பார்த்துப் பிரமித்திடவே (1)

வேந்தனுங் காசி வேந்தனைக்கண்டு வில்லை வளை யென்றான்
சாந்தகுணத்த ஜனகனேகோடி தண்டமென்று சொன்னான்
குடகு மன்னன் எழுந்திருந்து
        கோனே என்னாலாகாதென்றான்
மடந்தை ஸீதை யெனதா யென்றுரைத்தான்
        மகதன் சேரன்-மன்னவனே மன்னியும் என்றான். (2)

வழுதிவேந்தன் எழுந்துவில்லை வணங்கியே சென்றான்
தொழுது நின்று சோழவேந்தன் துயரமே கொண்டான்.
வழுதிலாத வேந்தர் யாரும் பகர்ந்த உரை கேட்டு மன்னன்
பலவான் யாருமில்லையோ வென்றான்
        இதனைக் கேட்டு பரபரப்பாய் ராகவன் நின்றார். (3)

மாமுனியாம் கௌசிகனும் மாதவனை
        நோக்கியப்போ ராமனேவில்
வளை யென்று உரைத்தார் ராகவனும்
        ஏமவில்லை ஒரு கையாலெடுத்தான். (4)

21-வது கண்டான் பரசுராமனை.

வில்லை எடுத்து முறித்தான்-ராமன்
        ஜனகன் சொல்லைப் புவிக்கறிவித்தான்
எல்லை யளந்த சிலை வல்லான் புவிகுலுங்க எல்லவரும் நடுங்க
        எடுத்தான் வில் ஒடித்தானே. (1)

நாகம் மனம் வருந்திட புவிசுமக்கும் நாகன் சிரங்குலுங்கிட
நாக சயனதொளிர் ராகவன் வில் தொனியால்
        மேகங்களார்ப் பரிக்க ஸாகர நீர் கரிக்க (2)

அண்டகடாகமதிர அஷ்ட கஜங்கள் திண்டுமிண்டாடி கதர
அண்டர்க்க முதளித்த ஐயன் மகிமைதனை
எண்டிசையும் புகழ கண்டு சீதை மகிழ (3)

மன்னர்களுள்ள மகிழ்ந்தார் மருமகனை
மன்னன் ஜனகனுகந்தான்
தன்னிக ரொன்றில்லாத தசரத ராஜனுக்கு
மன்னன் விவாக ஓலை அந்நேரமே அனுப்ப (4)

22-வது ஸத்தி ஸகித கணபதிம்.

ஜனகன் கடிதம் கண்டுமே தசரதன் மகிழ் கொண்டுமே
அனகன் ராமன் செய்த மகிமை அதிசயமென விண்டுமே
விண்டுமே விண்டுமே. (1)

சேனைகளுடன் கூடவே சேர்ந்து மிதிலை நாடவே
வானவர் ப்ரியன் ஜனக மன்னனெதிர் கொண்டாடவே
ஆடவே ஆடவே (2)

சேடியர்களுங் கூடியே சிந்தை மகிழ்ந்து ஓடியே
நாடி ஜனகி யருகில்வந்து ராகவன் புகழ் பாடியே
பாடியே பாடியே (3)

23-வது ஸ்ரீரங்கநாதா.

மாதரிவ்விதமாய் மகிழ்ந்தினிதிருக்க
மாதவனலங்காரத்தைப் புகல்வேன்
மாதரசே கேளடியோ (1)

சந்திரனி கர்த்த கந்தமலரொத்த
முகஅரவிந்தத்தில் விந்தையுடன்
நாமமிட்டு அணிந்தான் கந்த கஸ்தூரி பொட்டு (2)
மீன உருவான தீனன் செவிதன்னில்
பானுவைப் பழிக்கும் பல பணிகள்
வானவன் அணிந்தானடி (3)

மேருநிகர் தோளில் தீரன் நல் அணிகள்
சீருடனணிந்தானடி ஜெக-
தீசனும் மகிழ்ந்தானடி. (4)

பொன்னரை ஞாண் பூட்டி மின்னுமாடை சாத்தி
மன்னுமிதிலாபுரியை வலம் வர
மாதவன் ரத மேறினன். (5)

கீதங்கள் முழங்க நாதங்கள் வழங்க மாதர்கள் மயங்க
மாதவன் மனமகிழ்ந்து மிதிலை வீதிவல மாகி வரார் (6)

சொர்ன கும்பம் நால மின்னிடையார் சூழ மன்னவர்கள் தாழ
மன்னன் ஜனகன் மருகன் மகிழ்ந்து மின்னுமணி தேரேறினன்

24 வது கும்மியடி பெண்கள்.

ஜோதியென மின்னும் சொர்ன ரதந்தனில்
மாதவன் வீதி வருகக்கண்டார்
கோதை அழகிய மாதர்கள் கூடியே
கோமள ராமன்மேல் மையல் கொண்டார். (1)

கன்னி ஒருத்தியை காதலனழைக்க
காதில்கேளாமலே ஓடிவந்தாள் [தாள்
பின்னுமொருத்தி ஆடை நெகிழ ப்ரீதியாய் ராமனை நாடிவந்
துன்னுகுழலாள் தோகை ஒருத்தி தோழியே பாரடி என்றுரை
சொன்னது என் மனம் ஸீதா ராமன் பின்னே [த்தாள்
சேடியே கண்டாயோ என்றுரைத்தாள். (3)

பெருத்த சிலையை ஒடித்த வீரராமா
பேசாயோ என்றாள் ஒரு மாது
வருத்தமோமாரன் கைவில்லை யொடித்திட
மட்டாயோ என்றாள் ஒரு மாது (4)

வானவர் நாதன் வடிவழகைக் கண்டு
மனம் மகிழ்ந்தாள் ஒரு மாது

ஜானகி செய்த தவமேதவமென்று
ஸந்தோஷம் கொண்டாள் ஒரு மாது. (5)

எத்தனை பாக்கியம் செய்திந்த ஜானகி
இந்த மணாளனைத் தானடைந்தாள்
அத்தனை புண்ணியம் நாம் செய்திலோமென
ஆயாசம் கொண்டாளொருமாது (6)

ஒண்டொடி மாதர்கள் விண்டிடவே மணா
மண்டபந்தன்னி லடைந்திடவே
கண்டு மொழியுடை காரிகையர் கூடி
கன்னி சீதையை யலங்கரித்தார். (7)

25-வது மாதுமிக வருந்த அந்த.

தேசராஜர் சேர்ந்திருக்கும் சீர் சபைதனில்
ஆசையுடன் சேடியர்கள் அக்ஷணந்தனில். (1)

கூடியப்போ ஸீதையிடம் கும்பலாய்ச் சென்றார்
வாடிசீதை யுந்தனுக்கு மணமிப்போ வென்றாள். (2)

கல்யாண ராகவனை காணலா மென்றாள்
நல்லாய்ராமன் கைம்மாலை பூணலா மென்றாள். (3)

கன்னியே ராமன் வடிவைக் கண்டாயோ வென்றாள்
நண்ணியே நம்ஸீதைக்கிதை விண்டாயோ வென்றாள் (4)

இந்துவதன ஸௌந்தரி ஸந்தோஷமாகினாள்
சிந்தைமகிழ்ந்து சேடியருடன் ஸபையிலேகினாள். (5)

26-வது கோடி மன்மத.

மாதுஜானகி விவாகவைபவம் சொல்வேன் மாதரசே கேளடி
வேதனைப் பயந்த நாதனை நயந்த
ஸீதாவிவாகம் தனை மாதே நீகேளதனை. (1)

வேதியர்கள் கூடி வேதிகையை நாடி நீதியாய் ஓமம்செய்தார்
போதினில் பூமாரி பெய்தார். (2)

இந்துமுகி ஸீதைகந்தமலர் மாதை ஸுந்தரன் கைப்பற்றினன்
அந்த அம்மி சுற்றினன். (3)

அநதரர்கள் ஆர்ப்ப அரசன் மகிழ் பூப்ப
அந்தமுடன் தாரைவார்த்தான்
தொந்தவினை யாவும் தீர்த்தான். (4)

மன்னவர் மகிழ மன்னவர் புகழ அன்னையரானந்தமேவ
விண்ணவர் பூமாரி தூவ (5)

அம்புவிழி சீதை அன்புடைய மாதை
இன்பமாய்க் கரம் பிடித்தான்
தம்பியர் மணமுடித்தான். (6)

27-வது அனுமாக்குச் சூடாமணி.

தம்பியர் மூவர் மணமுடித்து தாசரதிதன் மனம் களித்து
அன்புடன் மாதர்கள் சோபனம் பாடவே
அந்தப் புரத்தில் மகிழ்ந்திருந்தான். (1)

உந்தனையன்றி அயல் மாதரைச்
சிந்தையினலும் நான் எண்ணேனென்று
கந்தமலர்க் குழல் ஸீதையுடனே
சிந்தை மகிழ்ந்து ராமனிருந்தான். (2)

அந்நேரம் தன்னில் தசரதனும்
தன்னகரம் செல்லவே நினைந்து
மன்னன் ஜனகனிடம் விடைகேட்க
வரிசை யளித்ததைச் சொல்லுகிறேன். (3)

யானைபரியில் லாயிரமாம் அற்புதத்தேர் பதினயிரமாம்

சேனைகாலாள்களி லாயிரமாம்
சிறந்த சேடியர் மூவாயிரமாம். (4)

முத்து படத்திலோராயிரமாம்
ரத்னப் பணியிலெ ஆயிரமாம்
கொத்து ஸரத்தி லீராயிரமாம்
கோமேதமாலைக ளாயிரமாம் (5)

தங்க வட்டில் ஸதகோடிகளாம்
தந்தப் பெட்டி ஸதகோடிகளாம்
பங்க மில்ல இன்னம் பண்டங்களை
பாவை ஜானக்கிக்கி தான் கொடுத்தார். (6)

28-வது மாமிப்பாட்டு.

வாட்ட மில்லாமல் ஜானகியொடெல்லோரும்
வர்ணரதந் தனிலேறி கொண்டார்
பாட்டனும் கேகயன் பரதசத்ருக்னரை
பரிவுட னூட்டிற்கழைத்துச் சென்றான். (1)

வரும் வழிதனில வசகுனங்கண்டு
மன்னன் தசரதன் உள் வருத்த
இரவிகுல தீபன் தந்தையைத் தேற்றியே
இன்பமாய்த் தேரை நடத்தி வந்தார். (2)

கையினில்கொண்ட பரசாயுதம் மின்ன
கட்டிய ஜடைமுடியும் துன்ன
மெய்யினில் பன்னிரு நாமம் விளங்கிட
வேகமாய் பரசுராமன் வந்தார். (3)

நில்லு தசரதா செல்லாதே நானிங்கு
வல்லையென நீயும் வந்தாயோடா

வல்லஎன் வில்லிற்கு எல்லே சொல்லிப்போது
நில்லு நில்லென்று நெறுங்கிடவே. (4)

சிந்தை வருந்திடும் தந்தைக்கிதம் சொல்லி
முன்புதன் தேரை நடத்திவர
எந்தனுக் கெதிராய் வந்தவ னாரென்று
ராகவன்முன் சில பேசிடுவான். (5)

29-வது இந்தக் கண்ணுடியின்.

தரணியி லரசன்போல் காண்கிறு யாசீர்வாதம்
தந்தனம் ரகு ராமா
தெருளும் புகழுடைய முனிவன்போல் காண்கிறுயே
தெண்டம் பரசு ராமா (1)

அரிவையாம் தாடகையை அம்பெய்து வென்றுயே
அடவோ ரெகு ராமா
முரடர் தொடுக்கும் வில்லே முனிவன் நீ எடுத்தாயே
முறையோ பரசு ராமா (2)

பேயாகிலும் ஒருபெண் கொலே செய்யலாமோ
பெருமையோ ரகு ராமா (3)

தாயாரைக் கொன்றவன் நீ இந்த மொழி உரைக்கத்
தகுமோ பரசு ராமா (4)

தந்தையின் சொற்படி தட்டாமல் யான் செய்தேன்
தாய்கொலேயோ ராமா
சொந்த என்குரு வாக்கால் நானும் செய்தேன் பெண்
கொலேயோ பரசு ராமா (5)

பலமில்லாவில் லதனை ஜனகிக்கா யொடித்தாயே
பாரிதைவளே ரகு ராமா

நலமுடன் வளைத்தேன் இவ்வம்புக்கு வழியெங்கே
நவில்வாய் பரசு ராமா (6)

அருமையாய் யான் செய்த அருந்தவ மெல்லாம்
உந்தன் அம்புகளித்தேன் ராமா
வரும்வழி பார்த்துக்கொண் டோடிப்போ னின்றால்
அவமானம் பரசு ராமா (7)

பெருமையா யவன் தந்த அருத்தவம்தனி லம்பைப்
புகழுடன் செலுத்திவிட்டு
அருமையாமந்த வில்லை வருணனிடங் நாணிலே
அடைக்கலமாக வைத்தான். (8)

30-வது நந்தனருமைப்பாலனே.

பரசுராமர் கர்வபங்கம் பண்ணிபின் ராமதுங்கன்
அரசனை வணங்கி நிற்கதசரதன் அணைத்து மிக்க. (1)

மைந்தன் கலி தீர்த்தவனே எந்தனையும் கார்த்தவனே
எந்தனருங் கண்மணியே இராகவ நவமணியே. (2)

யாரும் நேரில்லா வீமனை தீரன் பரசுராமனை
வீரனே நீவென்று வந்தாய்என்வேதனை தனைக் களைந்தாய்
சந்தோஷமாக நடந்தார் சரயு நதி கடந்தார்
அந்தமா யயோத்தி தன்னை அங்குள்ளோ ரலங்கரித்தார்
ரத்ன கம்பம் நாட்டி ஒளிர் வஜ்ரபந்தல் கூட்டி நல்ல
முத்தினால் கோலமமைத்து ரத்ன கம்பளம் விரித்து. (5)

பூரண கும்பங்கள் வைத்தார் பூமியில்பன் னீர்தெளித்தார்
வாரணமலங்கரித்தார் தோரணமெங்குமமைத்தார்
சொர்ண கும்பம் தாங்கி கொண்டார்
மின்னிடையார் சூழ்ந்து கொண்டார்

மன்னனுடன் ராகவனே
மானகர்க் கழைத்துச் சென்றார். (7)

அத்தனே பேரும் மகிழ உத்தமனிருந்தானப்போ
சித்திடையாள் சீதையுடன் உற்றதை விளம்புகிறேன். (8)

ஸ்ரீபாலகாண்டம் முற்றிற்று. ஆக கூட்டம் 30.

அயோத்தியா காண்டம்

1-வது நாம தேவாவுன்னே.

பூமிமன்ன னப்போ புத்ரனே யழைத்து
தாமஸ மில்லாதித் தாரைநீ யாண்டிட
ராமாமுடிசூ டென்றார் இது
நானுன்னைக் கேட்ப தென்றார். (1)

இத்தனே காலமாய் மெத்தத் தவம் செய்து
ஸுத்தானே உந்தனே டொத்த மூவரையும்
பெற்று மனமகிழ்ந்தேன்
பூபாரத்தை உனக்குத் தந்தேன். (2)

பண்டுமுதலாகப் பாலித்தே னுலகை
கண்டறிந்தேன் வெகுகண்யம் இனிமேலே
காணவேணு முன்னாலே பூமி
வார மினிஉன்மேலே. (3)

தந்தையுரை கேட்டு தாசரதியப்போ
சிந்தைப்படி யென்று செப்பிட மன்னனும்
மந்த்ரியுட னுரைத்தான்
மனதில் மிகக் களித்தான். (4)

2-வது மில்லாபீஸ்.

நகரை யலங்கரித்தார் அயோத்யா நகரை யலங்கரித்தார்
ஜெகமுழுதும் ஓலே அனுப்பி வைத்தார். (1)
அகமதில் சந்தோஷித்தார் நகரை
ஜெகதலம் புகழவே சிங்காரித்தார். (2)
வீதிதொரும் பந்த லமைத்தார் நல்ல
ஜோதிரத்னத்தாலே விதான மமைத்தார். (3)
பாதையில் பன்னீர் தெளித்தார் நல்ல
ஜாதிமல்லி எங்கும்வாசம் வீசஅமைத்தார். (4)
எங்கும் வர்ண தீபம் ஏற்றினர் ஒலிக்கும்
பொங்கும் வாரிதிமுத்தினல் கோலம் தீட்டினர். (5)
அங்கம் உருகியே ஏற்றினர் நாளே
எங்கள் ராமன் அபிஷேகம் என்று சாற்றினர். (6)
பேரிகை ஒலியை யறிந்தா னிராகவன்
வேடிக்கைச் செய்ததை வீணேயாக நிணைத்தாள். (7)
பாரிதை யறிவே னென்ருள் கூனிவெகு
பேரிசைச்சலுடன் விரைவாக நடந்தாள். (8)

3-வது.

வந்தனளே வந்தனளே
மந்தரையும் மெள்ள வந்தனளே
வந்தனளே வந்தனளே ரகு
நந்தனன்மேல் மிகநொந்தனளே. (1)
நரைத் தலேயும் நடு நடுங்க
நாணியே முதுகினில் கூன்துலங்க
விரைத்து விரைத்து உடல் குலுங்க
வேகமதாகக் கைகேயிடந் தனில் (2)

ராமனுக்கு அபிஷேகமடி நாளை
நாரியே நீ யறியா தென்னடி
பூமன் அளித்த இருவரம் உண்டிடஉன்
புத்திரன் நாடாள காகுத்தன் வனமாளவென்று. (3)
கூனியுரைத்த மொழியறிந்தாள் கைகை
கோபத்தினுல் மிகக் கண்சிவந்தாள்
ஹானிவந்ததெனவே யிறைந்தாள்
அன்பிலாத கூனிமனம் புண்படவே பேசிடுவள் (4)

4-வது தெள்ளுதமிழுக்குதவு.

என்னசொன்னுயடி நீ கூனி
மன்னன் ராமன் வனம் போகலாமோ நீ
இன்னுமொருதரம் இவ்வார்த்தை சொல்லிடிலே
உன்னையின் னகர்விட்டு நானே
ஓட்டிவிடுவே னிப்போதானே. (1)
கன்னல் மொழியாளே கைகைமானே
உன்னைக் கனப்படுத்த வந்தேண்டி நானே
மின்னிடையாளே உன்முன் னதிகாரமெல்லாம்
இன்றோடு சென்றதடிமானே-இதை
எடுத்துரைக்க வேண்டுமோ நானே. (2)
தாடகையினு ருயிரை தீர்த்தானடி அவன்
தபஸியின் யாகம்தனைக் கார்த்தானடி
காடுமலைதான் நடுங்கச் சாடிடவந்த பரசு
ராமன் கர்வம் தீர்த்த ரகு வீரனடி இந்த
நாட்டை யாள ஏத்த நல்ல தீரனடி. (3)
கேகயர்கோன் பெற்றெடுத்த மாதே நான்
கேடு செய்யவந் தேனென் றெண்ணுதே

பாகுமொழியாளே உன்
பாலனில்லா வேளேயினில்
பட்டங் கட்டும் சுதை யரியாதெ
திட்டுகிறுய் என்னே நீ இப்போதே. (4)

கேட்டுமெந்த கேகையின் குமாரி
வாட்டமத்துதன் மனதில் தேறி
நட்டமுன் கூனி தன்னே கூட்டுரவாய் கிட்டிருக்கி
நாட்டைப் பரதன் ஆளத்தானே
ஒரு நன்மதி கூரென் றுரைத்தான் மானே. (5)

அந்தாருலகந் தன்னில் முன்னே
அரசன் தந்த வரமிரண்டு மின்னே
இந்த நல்வேளேயினில் அந்த வரமிரண்டில் உன்
மைந்தன் பரதன் ராஜனுக
மற்றென்று ராமன் வனமேக. (6)

5-வது பார்த்துமந்த துஷ்யந்தனும்.

இந்தவிதமா யுரைத்து மந்தரையும் சென்ற பின்பு
சிந்தையில் துயர் மிகுந்து
சேல்விழியாள் வீற்றிருந்தாள். (1)

மைந்தனுக்கு முடிசூடும்
வைபவமுரைக்கவென்று
சிந்தையில் சந்தோஷம் கொண்டு
தசரத ராஜன் வந்தான். (2)

வந்ததொரு மன்னவனும்
மாதிருக்கும் செய்தி கண்டு
பைங்கொடியே உந்தனுக்கு
வந்த கோபமென்ன வென்றூர். (3)

என்னவென்று கேட்டவுடன்
ஏந்திழையும் கூறிடுவாள்
முன்னே தரேனென்ற வரம்
இன்றெனக்குத் தாருமென்றாள். (4)

தருவேனென்ற உடன்
தாசரதி பதினாலு
வருஷம் வனம் ஏக எந்தன்
மகனரசாள வென்றாள். (5)

இம்மொழி உரைத்த உடன்
ஏங்கியந்த மன்னவனும்
நன்மொழியாய் ராமனுக்கு
கென்ன பிழை செய்தா னென்றார். (6)

முன்னவனே வனம்போக்கி
பின்னோ னரசாளுவது
இன்னிலத்தோ ரேற்பார்களோ
என்ன மொழி சொன்னா யென்றார். (7)

6-வது வாங்கிய ப்ரசாதந்தனே.

என்னகாணும் மன்னவனே
சொன்னசொல் பிறழலாமோ
முன்னெனக்குத் தாரேனென்று
மன்னவனே யென்ன யீதென்றாள். (1)

எத்தனே சொன்னாலு முந்தன்
ஸுத்தனே வனமனுப்ப
சித்தத்தினில் வைத்திடாமல்
எத்தனம் நீ செய்திடா யென்றார் (2)

ராமன் வனமேகிடிலென்
ஜீவனும்வான் சென்றிடும் பின்

நீ மகிழ்ந்துன் மைந்தனுடன்
நீணிலத்தில் வாழ்ந்திரு வென்றார் (3)

உந்தனுட மைந்த னெனக்கு
உரிமை செய்யலாகா தென்று
சிந்தையின் ஸ்மரணை தப்பி
செல்வனும் பூமியில் சாய்ந்தனன். (4)

ராஜனு மிவ்வித மிருக்க
நல்முகூர்த்த வேளையென்று
பூஸுரர்கள் மன்னனுடன்
புத்ரனை யழைத்திடு மென்றார்
வாசிஷ்டர் மனதில் கொண்டாடியே வந்தார் (5)

7-வது மாது அவள் மனம் வருந்த.

மன்னவனைத் தேடியங்குமா முனிவந்தார்
மின்னிடையாள் மாளிகையில் வேந்தனைக் கண்டார். (1)

சாய்ந்திருக்கும் மன்னவனைத் தடவி எடுத்தார்
ஏந்திழையே கைகேக என்னவென்று விசாரித்தார். (2)

அந்தர ருலகந்தனில் எந்தனுக்கு முன்
தந்தவர மீவதற்குத் தயங்குறு றென்றார். (3)

பரதனுக்கு ராஜ்யமும் ராமன் பதினாலு
வருஷம் வனத்தில் வஸிக்க
வரம் தந்தார் என்றாள். (4)

ராமனென் றுரைத்தவுடன் ராஜன் விழித்து
மாமுனியே ராமனிங்கே
வந்தானோ வென்றார். (5)

வருவான் ராகவன் என்று வசிஷ்ட ருரைக்க
மறுபடியும் மூர்ச்சையாகி மன்னனிருந்தான். (6)

8-வது ஆரென்று கேட்டதொரு மைந்தனை.

கேகயன்குமாரி ஒரு தூதனை கூவி
ராகவனை கூட்டிவாரி வேகமா என்றான். (1)

காவலர் உறைத்திடவே காகுத்தர்ப்போ
வேகமுடன் அன்னை மனை நாடியேவரார். (2)

என்ன காரணமுறைப்பீர் அம்மணி என்று
தன்னடி பணிந்து நிற்கும் தனயனை நோக்கி. (3)

காகுத்தன் வரவறிந்து கைகையுமப்போ
வேகமாய் எழுந்து வந்து வாசலில் நின்றாள். (4)

எந்தனக்குரெண்டு வரம் தந்தனர் அப்பா உன்
தந்தை சொன்ன வாக்கியத்தை தப்பாமல்சொல்வேன் (5)

பதியைப் பரனை நீ வனந்தனில்
பதினாலு வருஷம் வஸித்து வாவென்றாள். (6)

மஹா பாக்யம் என்றுரைத்து வணங்கி நிற்க
மரஉரி கொண்டு வந்து கையில் கொடுத்தாள். (7)

தந்தையிடம் சொல்லு மென்று சந்தோஷம் கொண்டு
தன்தாய் வஸிக்கின்ற தானத்தில் வந்தார். (8)

9-வது பச்சை மலை.

கௌசலை தன் மகன் வரவைக் கண்டு மகிழ்கொண்டு
அவஸரமாய் எழுந்துவந்து அணைந்து முகந்துகொண்டாள் (1)

கொடி குடைகள் சாமிரமில் லாமலெந்தன் பாலா
கடு நடையாய் வந்ததென்ன காரணம் சொல் சீலா. (2)

அணி அணியாய்ச் சேர்ந்திருக்கும் அரச சபைதனில்
மணிமுடி தரித்திடாமல் வந்ததென்ன வென்றாள். (3)

அன்னையுரை கேட்டவுடன், அடியினில் பணிந்து
மன்னன் சொன்ன வார்த்தையையென் மாதாவே கேளென்றார்

ஸாரமற்ற ஜென்மத்தினை தாண்டிக் கரையேற
ஆரண்யத்தில் பதினாலாண்டு அனுப்பிவைத்தாரென்றார். (5)

இத்தனையும் கண்டிடவோ எந்தனுட மைந்தா இத்தரையில்
யானிருந்தேன் என்று மிக நொந்தாள். (6)

வெண்ணை வரும் தருணமதில் கடமுடைந்தார் போல
பொன் முடி சூடும் தருணம் புதுமை வந்ததென்றாள். (7)

உந்தனை விட்டொரு நிமிஷம் உயிர்தரியேன் ராமா
எந்தனையும் கூடழைத்து ஏகுவாய் நீ யென்றாள். (8)

பரதனிந்தப் பூமிதனை யாண்டிடுவானம்மா
அருமையாக உன்னை யவன் ஆதரிப்பானென்றார். (9)

நைந்திருக்கும் தந்தைக்கு நீர் நல்வசனம் பேசி
சிந்தை வருந்ாதிரும் நான் சென்றுவரேனென்றார் (10)

10-வது இந்தவிதம் ஸகுந்தலை.

அன்னையைத் தேற்றி ஸுமித்திரை யிடந்தனில்
ஐயன் விடைகொண்டு வீதி வந்தார்.
மன்னவனான ஸௌமித்ரியறிந்திதை
தென்னவன் போலே சினந்தெழுந்தார். (1)

வேலைக் கரத்தினில் ஏந்தி கொண்டார் வீரன்
வில்லையும் தோளினில் தாங்கிக் கொண்டார்
காலனைப் போலே விழி கனல் சிந்திடச்
சீலனும் கோபத்தி னாலுரைப்பார். (2)

தேசத்தை ராமனுக்கே யளிப்பேன் நான்
சீறி வந்தவரை யோடடிப்பேன்
மோசம் செய்த இந்த ராஜனுடனே
கைகேசியையும் சிறையிலடைப்பேன். (3)

வஞ்சனையாக ஒருத்தி சொல்ல அதை
மன்னனும் கேட்டு மயங்கி யிருக்க
அஞ்சன வனம் நடக்க என்ன
அநீதமிந்த நகரிலென்றார். (4)

கோபத்தினாலிவர் கூறுமொழி யெங்கள்
கோதண்டராமன் செவியில் விழ
ஆபத்து வந்ததென்றோடி வந்து தம்பி
ஆர்மீதில் கோபித்தாயென் றுரைத்தார். (5)

மன்னவனைப் பொய்யனாக்கி விட்டு இந்த
மானிலந்தன்னை நாமாளலாமோ
உன்னுட கோபந்தணிந்திடுவாவென
உத்தமனுமவர் பின் நடந்தார். (6)

தம்பி லக்ஷ்மணன் தொடர்ந்துவர எங்கள்
தாசரதி வேகமாய் நடந்து
அம்பு விழியுடை ஜானகியா மெங்கள்
அன்னையரண்மனை தன்னில் வந்தார். (7)

11-வது. எல்லாரும் கூடி.

ராமன் வரக்கண்டாள் நங்கை மகிழ் கொண்டாள்
மாமுடி தரித்து வரும் வைபவத்தைப்பார்க்க வென்று
நாமிருக்க கால் நடையாய் நாதன் வரார்
என்று எண்ணி. (1)

மங்கையு மெழுந்தாள் மாதவனும் வந்தார்
பாவையேயான் தந்தைசொல்லால்பதினாலுவருஷம் வனம்
போய் வஸித்து வருகிறேனென் தாயுடனிருந்திடென்றார்
கேட்டுமிக நொந்தாள் வாட்ட முற்று நைந்தாள். (2)
எந்தனைப் பிரிந்து வனம் ஏகிவரேனென்றுரைக்கச்

சிந்தையுமக் கெந்தவிதம்
வந்ததோ வென்றுரைத்தாள்
மரவுரி தரித்தாள் வந்துகைப் பிடித்தாள். (3)

தேவியின் மனம்மறிந்து செல்வனும் வில்லேந்தி வந்து
தேவர்கள் துதித்திடவே மூவரும் வெளியில்வர
தேசத்துள்ளோர் கண்டார்
கிலேசித்து மருண்டார். (4)

பொன்னின் முடி காண்பதற்கு
பூமன்னர்கள் சூழ்ந்திருக்க
மன்னன் செய்த காரியம் போல்
பின்னெவர் செய்வார்களென்று
சொல்லித் துயர் ஆழ்ந்தார்
எல்லவரும் சூழ்ந்தார். (5)

மெல்லி இந்த ஜானகியும்
வள்ளலான தம்பியுடன்
செல்வனை வனம் அனுப்ப
சிந்தனை செய்தாளே கைகை
பாவி என்று வைவார்
கோபத்துடன் சொல்வார். (6)

ராகவனில்லா நகரில் நாமிருக்கலாகாதென்று
ஸாஹரம் வருவது போல் யாவரும் பின்னே நடந்தார்
வீதி தன்னைத் தாண்டி
மாதவன் வந்தாண்டி. (7)

12-வது. பொன்னடி கெதி என்று

அண்ணல் ராமன் செங்கமலக்
கண்ணன் தம்பி பரதனை

மண்ணுளவே விடுத்துத் தம்பி
மைதிலியோடிரதமேறினன். (1)

சுமந்திரன் தேர் நடத்த ஜனங்கள் கீத முறைத்து
சூரன் மாரன்யேறி வந்தான் வனம் தனை
தேர்விட்டிரங்கி வந்து கங்கை கரையை
சுந்தரனும் கண்டானடி. (2)

லக்ஷ்மணனும்
ஸீதையுடன் வந்தானடி கங்கை கரை
ஸ்ரீதரனுகந்தானடி. (3)

மந்திரி துயர் மிகுந்து ஸுந்தரனருகில் வந்து
உந்தனை வனத்தில் விட்டு ராகவா
எந்த விதம் செல்வேனென்ருர். (4)

நில்லும் நீர் ஸுமந்திரரே
வெல்லும் உந்தன் விசனந்தனை
சொல்லும் நல்ல ஞாயந்தனை
நகர்க்குச் சொல்லுமையா வென்றுரைத்தார். (5)

தந்தைதனை தேற்றி நீரும் தம்பியை யரசில் சேரும்
என் தாயார்க் கிதம் கூறும் நீரும்
சிந்தை வருந்தாதிரும் என்ருர். (6)

மந்திரி ஜனங்களுடன் மானகரடைந்த பின்பு
ஸுந்தரனும் குகனுடனே சினேகமாய்
கங்கை தனைத்
தாண்டி வந்தார். (7)

பாரத் வாஜனைப் பணிந்து பாவை ஸீதை தம்பியுடன்
நேராகச் சித்ரகூட வனத்தில்
ஸ்ரீ ராகவன்
இருந்தானடி. (8)

அந்தரத்தில் ஓரசுரன் அன்னையின் தனத்தைதீண்ட
மந்திர பாணம் துரத்த மதிமயங்கி
மாதவனடி
பணிந்தான். (9)

நிந்தை செய்த சூரனொரு நேத்திரந்தனைப் பரித்து
பைங்கொடியாள் சீதையுடன் தம்பியும்
பானுகுலதீப னிருந்தான். (10)

12-வது. நின்றதொரு பாலகனை

வந்தான் சுமந்திரனும் வர்ணமணித் தேரதினில்
எந்த விதம் ராஜனுக்கு இம்மொழி
யுறைப்போமென்று மந்திரி துயர்மிகுந்து
வந்தனன ரண்மனையில்
வந்தனன ரண்மனையில். (1)

ஒட்டிரு கடுஞ் ஜீவனுடன் உத்தமனும் கண்விழித்து
கிட்ட விருக்கானோ வெந்தன்
கண்மணியைச் சென்றானோ
சொல்லென்றார். (2)

சுந்தரனும் தம்பியுடன் பைந்தொடியாள்
சீதையுடன் உகந்து வனம்
சென்றாளென்று உரைத்தவுடன்
உத்தமன் கரைந்திடுவான். (3)

பொன் முடிக்கு முடி சூடி பூமியாளப்
பாராமல் கல்மனத்தர் வாழ்கின்ற
கானகத்தில் கண்ணே யுன்னைப்
போகவிட்டேன் ஸ்ரீராமா என் கண்ணேயுன். (4)

மானகரை முடிசூடினப் போகவிட்டேன் வைதேஹி
தன்னுடனே ஆனை மீதில் பவனிவரும் என்

கண்ணே யுன்னலங்காரமென்று காண்பேன்
ஸ்ரீராமா வுன்னலங்கார மென்று காண்பேன்
அய்யாவென் றருகில்வந்து ஆரமுதம்போல்
மொழியும் செய்யாவெந்தன்
செல்வமே ஸ்ரீராமா வுன்செங்கனிவாய்
என்று காண்பேன். (6)
கன்மனத்தன் நானு முன்னை கானகத்தில்
ஏகவிட்டு இன்னு மென்னுயிர்
சுமந்து ஸ்ரீராமா நானிருப்பதென்ன
தன்மையோ ? (7)
பேசின சொல்லை முடிக்க நீசனிவனென்
றுந்தன் மாசற்ற மதிமுகத்தை
ஸ்ரீராமா மறைத்து வனம்
சென்றனையோ ? (8)
மல்லிகைப்பூப் பட்டாலுமுன் மலர்ப்பதம்
நொந்திடுமே கல்லு முள்ளுமான
காட்டில் எப்படி என் கண்மணி நடந்தனையோ ?
ஸ்ரீராமா வென் கண்மணி நடந்தனையோ ? (9)
கலமனத்தன் நீயுமென்னை கைகேயி கையில்
காட்டிவிட்டாய் நீ செல்லும் வனந்தனிலே
யாகிலும் புல்லாய் முளைத்திடுவேன் ஸ்ரீராமாவுன்
பூ முகத்தை கண்டிடுவேன். (10)
இந்த விதமாய் புலம்பி சிந்தை ஸ்மரணை நீங்கி மைந்தனே
ஸ்ரீராமா வென்று மன்னனும் வைகுந்த மடைந்தனனே. (11)

14-வது. முத்திநெறி.

பூபதியும் வானடைய யாவர்களும் மிகவருந்தி
தீவிரமாய் பரதனுக்கு செப்பமிட்டார் ஓலைதன்னை. (1)

தூதனவன் கைகொடுத்து துரிதமுடன் தானனுப்ப
நாதனுக்கு முடிசூடு நற்செய்தி தானறிந்து. (2)
கேகய தேசங்கடந்து தேரதனில்தம்பியுடன்
ராகவனை காணவென்று வேகமுடன் பரதன் வரான். (3)
கோசல தேசமுழுதும் தேஜழிந்து காணகண்டு
மோசமேதோ வென நினைந்து வாசலினில் வந்திறங்கி (4)
தாயினிரு பதம் பணிந்து தந்தையிறந் ததையறிந்து
தூயவனும் பரதன்மிக துடிதுடித்து மிகவருந்தி,— (5)
அண்ணன் திருமுகம்காணில் என்கவலை நீங்குமந்த
புண்ணியவானெங்குளனே ? புகன்றிடென்ன விளம்பிடுவான்,
ஒருவரத்தா லுலகமெல்லா முந்தனுக்கே வாங்கிவைத்தேன்
மறுவரத்தால் ராகவனை வனம்போகச் செய்தேனென்றாள் (7)
இந்தமொழி கேட்டவுடன் செந்தழலில் வீழ்ந்தது போல்
சிந்தை மிகத் துடிதுடித்து செப்பிடுவான் பரதனப்போ. (8)

15-வது ஏன் மயங்குகிறாய் மனதே.

பாவி நீ என்னடி செய்தாய்
அடி கைகேசி பாவி என்னடி செய்தாய்
ஆவியான அண்ணனையும்
ஆரண்யத்திற் கேகச் செய்தாய்.
சாவில்லாத தந்தை யுயிர்
போகச்செய்தாபேடி நீலி. (1)
சிந்தையினில் வர்மத்தை வைத்தாய்
வரமிரண்டு தந்தையிடத்தினில் யாசித்தாய்
தந்தையுன் சொல் தவிராமலே அந்தரலோகம் புகுந்தார்
அந்தகன்போலி க்குலத்துக்கிந்தவிதம் கேடுசெய்தாய்
அண்ணனைப்போ லென்னை நினைத்தாய் அறிவில்லாமல்
பெண்மதியால் ஏதோ யோஜித்தாய்,
எண்ணிலுடுக்கக் கூட்டமொரு விண்மதிக்கு நேராமோடி

மண்ணில் எந்த னண்ணனுக்கு
மற்றொருவர் நேராமோடி (பாவி) (3)
அண்ணன்காய் கள்தின்ன லாமோடி
நீயும் நானும் நெய்யும் பாலுமுண்ணலாமோடி
மண்ணுள எந்தனுக்கு வல்லமையுண்டோ சொல்லடி
அண்ணனையா னென்று அஞ்சினே னுன்னைக்
[கொல்லாமல் (பாவி) (4)
இந்தவிதம் தாயை சீறிநான்
கௌசலையைவந் திருபாதம் வணங்கினான்
அந்த ராமத் ரோகம்
நானறிந்தாலனு பவிப்பேனம்மா
எந்த விதமு மழைத்துவருவேன் ரெகுபதியை
என்றுரைத்தான். (பாவி) (5)
சித்தன்னையின் பாதம் பணிந்தான்
தந்தைகடன் சத்ருக்னனோடே செய்து வந்தான்
பத்தினிமூவர் தவிர மற்றவர் தீயில் குளித்தார்
இத்தரையையாளச் செங்கோ
லேந்திடென்றார் வசிஷ்டமுனி. (பாவி) (6)
கேட்டுமிக நொந்துருகினான் கலி
யுகமோ நாட்டினீரிவ் வார்த்தையை என்றான் [நான்
நாட்டையாளு மன்னனங்கே காட்டினில் வசித்திருக்க
கூட்டிவருவோமவனை கூட்டுங்கள் படையை என்
[றான். (பாவி) (7)

16-வது நடப்போம் வாடி.

கோதண்ட ராமனை நகரினி லழைத்திட
கூடினர் ஜனங்கள் கொண்டாடினரே
ஆதவனைக் கண்ட வம்புஜ மலர்போல்
அகமிக மகிழ்ந்து அனைவரு முகந்து (1)

தேசத்துள்ளசிறு பாலர்வயோதிகர்
சேனைகளும் படை சூழ்ந்துவர
மாசற்ற பரதன் வசிஷ்ட மகாமுனி
மந்திரி தம்பியு மருகில் வர (2)
முனிவர் வசித்திடும் வனங்கள் கடந்து
அனைவரும் கெங்கை கரையடைய
சினமுள்ளங் கொண்டு சேனையைக் கண்டு
சிறினன் குகன்பின் தேறினனே. (3)
மெய்யன் வனம்வந்த பின்னடந்த வற்றை
விளம்பியே பரதன் குகன்தனக்கு
அய்யன் என் அண்ணனை அயோத்தி நகர்க்கு
அழைத்திட வந்தே னென்றுரைத்தான். (4)
பெருகிய கங்கா நதியினை நீங்க
பரிவுடனே குகன் ஓடம் விட
வரமுனி பரத்வாஜனைக் கண்டு வணங்கி
யவரிடம் விடைகொண்டு (5)
சேனைநடந்த களைப்பாற்றி பரதன்
சித்திர கூட மருங்கில்வர
ஏனோ படைக ளிறைச்ச லென்று
மரமேறினன் இளையவன் சீறினனே. (6)
விரைவாய் பரதன் எதிர்த்து வருகிறான்
வெல்லுவே னிவனை நானென்றுரைக்க
பரதனும் நம்மை எதிர்த்துவிடுவானோ
பதறாதே தம்பி பொறுத்தி டென்றார். (7)
பதறாதே தம்பி பொறுத்தி டென்றார்.

17-வது கோள் சொல்லி சூர்ப்பனகை.

கண்டுகொண்டானே பரதன் கண்குளிர்ந்தானே
கண்டு மொழிச் சானகியும் தொண்டனும்

அருகிருக்க அண்டமெலா முண்டவனைச்
சென்று சித்ர கூடத்தினில் (1)
அடிபணிந்த தம்பிதன்னை அன்புடனெனோக்கி
அய்யர் ஸுகமோ என அவன் சொல்ல அறிந்தான்
அடியேன் வருமளவும் ஆவிவைத்திருக்கொணுதே
முடிஅரசே என்றுருக முனிவஜிஷ்டர் தேத்திடுவார்.
அறுபதினு யிரவருஷம் ஆண்டிருந்தான் பூமான்
அதுவும்காணு தென்றவர்க்கு அழ
லாகுமோ ராமா-கருமவிதி நடத்துமென்ன
கங்கை மூழ்கி சீதையுடன் தருமவிதிதான்
நடத்தித் தம்பியைப்பார்த் தேது சொல்வார். (3)
குடை முடிதரித்து இந்தக் குவலயமாளாமல்
ஜடைமுடி தரித்து வந்தாய்
தம்பி யென்னவென்றார். கொடியளான கைகை
செய்த கொடுமையென்ன சொல்வேனென்று
துடிதுடித்துப் பரதன் மிகச்சோர்ந்து
பின்னும் கூறிடுவான். (4)
பாவி வயற்றில் உத்தித்தபாவம் தீர அண்ணு
நானல்லோ தவம் புரிய வேணு
முனக்கென்ன நாதனை நீயேயிந்த
நானிலத்தை ஆளவேணும்
பேதைநா னறிகுவனோ பெருமானே
வாருமென்றான். (5)
தம்பி யுரை கேட்டுரைப்பான் தாய்
சொல்லுக்கும் ரண்டோ தந்தை
மொழிதாண்டி லொரும் ந்திரமும் உண்டோ:
அப்புவியில் தர்மமிது ஆதலினாலே பரதா
அம்புவியையாள் பதினாலாண்டு
சென்றுவாரே னென்றான். (6)

ஓதுதவணை தவறில் உயிர்விடுவே னென்றான்
பாதுகையைப் பெற்றிரு பாதம் வணங்கி
மீண்டான். பாதுகைக்கு முடிதரித்து
பாரிலுள்ளோர் குறைகள் தீர்த்து
நாதன்வரும் வழிகுறித்து
நந்திகிராமத்தி லிருந்தான் (7)

ஸூத்தனிப்படி யிருக்க கர்த்தனான ராமன்
சுத்தவர்கள் நித்தம்வந்து
மெய்த்திடுவாரென்று சித்திரகூடங்கடந்து
தேவியுடன் தம்பிவர
அத்திரியைக் கண்டிறைஞ்சி அய்யனும்
நடந்து வரார் (8)

ஆகக் கட்டம் 17 ஸ்ரீ அயோத்யாகாண்டம் முற்றிற்று.

ஆரண்ய காண்டம்.

1-வது பாராயப்பா மண்டபம் தன்னை

தண்டகாரண்யந்தனில் வந்தார் தாசரதி
தண்ட காரண்யந்தனில் வந்தார்
அண்டர்துயரம்தீர அவனியிலவதரித்த
புண்டரீகாக்ஷன் ஸீதையும் தம்பியுடன் (தண்ட)
வழியில் விராதனுக்கு அழியாப் பதமளித்து
மொழிதுதிகேட்டுகந்துமுருகுகந்தன்வரார் (2)
மாதவன் வரவுகண்டு, மாதவர்கள் எதிர்கொண்டு
ஆதவனைக் கண்டமலர்போல் அகமகிழ்ந்தார் (3)
துறவிகளாமெங்களை துஷ்டர்கள்
வருத்துகிறார் இரவிகுலத்தோனே
என்னையாள்வாய் இரவிகுலதீரனே
என்றுரைத்தார். (4)

அரண்ய வாஸிகட்கு அபயங்கொடுத்து ராமன்
சரபங்கமாமுனிதன் ஸ்தானம் வந்தார் (5)
அரவிந்த லோசனனை சரபங்கர் எதிர்கொண்டு
வரவேற்றுபசரித்து மகிழ்ந்துரைப்பர் (6)
நத்தவம் சித்திதருந்தன் நற்பத மருள்வாயென்று
பத்தினியோ டக்கினிதனில் பாய்ந்தடைந்தார் (7)
மகமுனி சரபங்கரும் வைகுந்த பதமடைய
அகஸ்திய ராச்ரமந்தனில் அபிராமன் வந்தான் (8)

2-வது இந்தவிதம் சகுந்தலை

கோமள வடிவுடைய ராமபத்ரனும்
குற்றமற்ற மாமுனியைப் பணிந்து நின்றார்
தூமுனி யகஸ்த்யரும் ராகவனுக்கு
தூணியும் பாணம் சிலையும் கொடுத்தார் (1)
திரிகால உண்மைதெரியும் முனியிடம்
சிலையும் கணைகளும் பெற்றுக் கொண்டு
பரிவுடனுகை வரும்போது
பஞ்சவடி தீரம் கண்டனர்கள் (2)
அங்கே ஜடகயு முறைமை சொல்ல
அரிய கோதாவரி தாண்டியே தன்
மங்கை ஸீதையுடன் தம்பியாற் செய்திடும்
வர்ணப் பர்ணசாலையில் வஸித்தார் (3)
மாதங்கம் வரும் வழி நோக்கும் நல்ல
மதமுள்ள அரிமாக் குட்டிபோல
மாதவ ராகவன் வடிவைக்கண்டு
மயங்கிய ரக்கியாம் சூர்ப்பனகை (4)
பஞ்சுபோல் நெஞ்சம் உருகிடவும்
பாவை வேடங்கொண்ட சூர்ப்பனகை
கஞ்சமலர்ப்பத ராமன் மேல்
மோகக் கருத்துடனே கிட்டவே நடந்தாள் (5)

பட்டாபிராமன் மனம் கலைத்துப் பட்ட
ஸ்திரீயாக வேணுமென்று துஷ்டனிராவணன்
வம்சம் நாசம் செய்ய சூர்ப்பனகை யங்கே
தோன்றினளே (6)
லங்கேசனுக்கு ஸகோதரியாகிய
நங்கை சூதும் வாதும் பேசிக்கொண்டு
இங்ஙனம் தேவரீரெந்தனையே
இசைந்து மணந்திட வேணுமென்ருள் (7)

3-வது நோட்

மெத்த ராகவனண்டையில் மெய்மயங்க உரைத்திட
சித்தத்தில் வைராக்யங் கொண்டு ஸ்ரீதரனுரை செய்வான் (1)
பத்தினி ஸகிதமாகப் பரிந்து வாழ்ந்திருப்போர்கள்
மற்ருெருவர் தாரந்தன்னை மனதினில் நினைந்திடார் (2)
சித்தசன்போல் வடிவும் நல்ல தீரமுள்ள என் தம்பி
ஸௌமித்ரியை யடுத்து நீயும் மேன்மையாக வாழ்ந்திடாய் (3)
பூமகள் அருகில் வரப் பூமன் ராமன் தம்பியை
நீ மணந்திடென்றுரைத்து நிர்மலனிருத்திட (4)
வீரராகவனுரைக்கவே கடோடரக்கியும்
பார்மகள் தனையெடுக்கப் பக்கத்தி லடுத்திட (5)
தோளெடுத்து ஓடிவரும் துஷ்டையைத் தம்பி கண்டு
வாளெடுத்து நாசி செவியும் சீலனுமறுத்திட (6)
அவமானமாப் சூர்ப்பணகை அண்ணனை நினைந்துமே
தவம்பெற்ற ராமனண்டை தம்பி வம்பை சாத்தினன் (7)
துஷ்டையா மரக்கிதன்னை சூரராமன் துரத்திட
பட்டபாட்டைக் கரனிடத்தில் படபடத்துரை செய்வாள் (8)

4-வது காமுனவினவே

கரனே நான் என்னசொல்வேன்
பட்டபாட்டை கரனே நானென்ன சொல்வேன்

நரமனுஷ்யாளிருவர் நாயகியுடன் வந்து
அறந்தவிர்த்தெந்தனை அவமானம் செய்ததைகரனே
அரக்கர் குலத்தை வேறுத்திட வந்தவராம்
கரத்தினில் வில்தரித்து காதலியுடனிருக்கிறார் (2)
சீசையென்றவள் பெயர் ஸ்ரீராமன் பத்தினியாம்
பூதேவிபோல அந்தப் பொற்கொடி வடிவழகை (3)
உத்தமி சீதையை உகந்தெந்தன் அண்ணனுக்கு
பத்தி யெடுக்கப்போனேன் பலங்கெடலானேனே (4)
இவ்வார்த்தை கேட்டுமே ஏகோபித் தரக்கரும்
செவ்வானம் சூழ்ந்தது போல்
சென்றார் படைகளுடன்-கரனும் திரிசிரனும்
தூஷணனும் குதித்து எழுந்திருந்தார் (5)

5-வது நின்றதொரு பாலகனை

படைகளும் கூட்டங் கூடிவந்து பர்ணசாலையை
வளைத்திடவும் அடைவியில்
தம்மைக்கண்டு வேகமாய் ஐயனும்
கதித்தெழுந்தார் (1)
தம்பி லெக்ஷ்மணன் வணங்க
அவனை அங்கு காவலாக வைத்து
வம்புசெய்யும் அரக்கர்களை வெல்ல
மாதவன் வெளியில் வந்தான் (2)
ஸரமாரியாய் விடுத்தார்
ராக்ஷஸர்கள் ஜானகி நாதன் மீதில்
வரவர அம்புகளை ராகவன்
வாளியால் அறுத்தெறிந்தான் (3)
திரிசிரசும் தம்பியும்
மிக்கத் திறமையுடன் போர்புரிய
உரமுடன் பாணம் எய்து
அவர்கள் சிரத்தை கொய்தானடி (4)

இருவரும் கீழ்விழவே
கரனும் எதிராக ஓடிவந்து
அரியபலமுடைய தனுஸை
முரியவே செய்தானடி (5)
சிலைமுரிந்திட வருணன்
முன் வைத்த சிலைதன்னைக் கொண்டுதந்தான்
நிலையினில் ஞானேத்தி ஸரங்களை
நித்யனும் விடுத்தானடி (6)
சென்று மந்தபகழிகளும்
கரந்தன் சிரமதைக் கொய்திடவே
நன்று நன்றென்று தேவர்கள் எல்லாரும்
ஸ்ரீராமனை ஸ்துதித்தார் (7)
கார்கொண்ட கரமதனால்
படைகளை கரைகாணும லடித்து
பாரளந்த தாள் பதிய பூமிதன்னி
பர்னசாலை வந்தானடி (8)
தாசரதி தன்னைக்கண்டு ஸௌமித்ரி
ஸாஷ்டாங்கமாய் அடி பணிந்தான்
மாசற்ற வைதேஹி தம்பியுடன்
வாழ்ந்தார் பர்னசாலையிலே (9)

6-வது பெற்றெடுத்த தந்தை என்று

லங்கையை நோக்கி வரும்
மங்கையை ராவணனும் கண்டு
தங்கையெ உன்னை இந்த
பங்கம் செய்தோர் ஆரென்றுரைத்தான் (1)
அரக்கன் உரைத்திடவே அடி அற்ற
மரம்போலே விழுந்து
இருபாதத்தைப் பிடித்து
ஏங்கி உரைத்திடுவள் அப்போ (2)

பாராளும் மன்னவனே
பஞ்சவடி தன்னிலொரு மனிதன்
பாரியாள் தம்பியுடன் பர்னசாலை கட்டி
வாழ்ந்திருந்தான் (3)
மன்னவனே என்ன சொல்வேன்
மாது ஸீதை தன்னுடைய வடிவை
அண்ணனே நீ கண்டாலே
அரை க்ஷணமும் தன்னை விட்டுப் பிரியான்
ஸீதை உனக்காகு மென்றே
திருடும் போது தம்பியவன் கண்டு (4)
காதும் மூக்கும் அரிந்து கொண்டு
காட்டில் ஓட்டிக் கதரவிட்டான் என்னை
அரக்கி உரைத்திடவே
அந்தப்புரம் தனிலவளை அனுப்பி (5)
அரக்கன் மனம் முருகி
அம்மான் மாரீசனிடம் சென்றான் (6)
கண்டு மப்போ மாரீசனை
கரங்குவித்து தெண்டனிட்டு நின்றான்
சண்ட மாருதனே நீ
இங்கு வந்த காரணமே தென்றான் (7)

7-வது-வந்தனம் தந்தேன்.

மாமனே கேளாய் மகிழ்ந்து மாமனே கேளாய்
காமன் ரதி தேவியும் கண்டு நாணும் ஸீதையை
நாமணந்திடவே நீ பொன் மானுகச் சென்றிடாய் (1)
லங்கேசனுரைத்தமொழி நாராசம்போல் சென்றிட
மங்கை பாகன்போல் சினந்து மாரீசன் உரை செய்வான்
ராவணா உனக்கு மதி யான் சொல்லவும் வேண்டுமோபர
தாரந் தன்னை யிச்சித்தாலப்பாவம்பழியும் போகுமோ (3)

மாரீசன் உரைக்க மன்னன் வாள் கொண்டு நெருங்கிட
பாருளோர் மயங்கும் மானுய் பாவை முன்னே தோன்
கண்டுமானை சீதையும் காகுத்தனோடு ரைத்திட [றினன்(4)
பண்டு ஆதிசேஷனும் பட படத்துரை செய்வன் (5)
ஞாய மானல்ல இது, ஞாலமளந்த பாதனே
மாயமானென்றுக்க மறுத்து ராமன் சென்றிட (6)

8-வது-பார்த்துமந்த துஷ்யந்தனும்.

மாயமான் பின்னே சென்ற, மன்னனி ராகவனும்
காயம்படச் சிலைதொடுக்க கள்ளமானும் வீழ்ந்ததுவே (1)
சீதா ஸௌமித்ரி என்று செப்பி மாரீசனழ
மாதவனும் மாயமென்று வனத்தில் நடந்தானடி (2)
சத்தந்தனை கேட்டவுடன் ஜானகியும் லக்ஷ்மணனை [3)
மைத்துனனே ராமனைப்போய் பார்த்துவாருமென்றுரைத்
[தாள்
துஷ்டர்களின் மாயை யென்று ஸௌத்தன் பதிலுரைக்க
நிஷ்டூரமாய் ஸீதை சொல்ல, லக்ஷ்மணனும்
சென்றனடி (4)
மகமுனி வேஷங்கொண்டு ராவணன் மைதிலி
முன்னே சென்று
தகாத வார்த்தை சொல்ல ஜானகியும் எதுரைப்பாள் (5)
ராக்ஷஸரை வேரறுக்க நாதன் வில்பிடித்திருக்கப் [ள் (6)
பூச்சிபோல் உந்தன் பலம் போகுமப்பால் போடாவென்று
அன்னையது சொன்னவுடன் அரக்கனும் வேஷம் விட்டு
பர்னசாலையுடன் தூக்கிப் பாரியதேரிலிட்டான் (7)
இப்படி யரக்கன் சொல்ல எதிர்த்தான் ஜடாயுவுமே
தம்பாகச் சிரகைக் கொய்யத் தரைதனில் வீழ்ந்தனனே.

9-வது தண்டுக மண்டலம் கொண்டு.

ஸீதை மிக நொந்து பணி யாவையும் களைந்து
பாதையில் கிஷ்கிந்தையினில் பார்த்தவரும் வேர்த்தார் (1)
காவலரே நாதன்வரில் காண்பித்திடுமென்றாள்
ராவணனும்சென் றசோககாவில் சிறை வைத்தான் (2)
ஸந்தோஷமாய் ராவணனும் அந்தப்புரம் செல்ல
இந்த விடந்தனிலே நடந்த செய்தி சொல்வேன் (3)
தம்பியின் வரவுகண்டு தாசரதியப்போ
வம்பு செய்த மாரீசன் தன் மாயையை உரைத்தார் (4)
கொண்டல் நிறத்தோனும் தம்பியண்டைதனை நோக்கி
கண்டு மொழி ஜானகியை ஒண்டியாய் ஏன் வைத்தாய் (5)
என்றுரைத்து பர்னசாலை வந்துமவர் பார்க்க
பைந்தொடியாள் சீதை தன்னை காணுமலே வேர்க (6)
கானக மெல்லாம் திரிந்து காதலியைக் காணுமல் பாணத்
[தாலே
அண்டர்களை பதரடிப்பேனென்றார். (7)
கண்டு தம்பி ராகவன் கழல் தனில் பணிந்து [ளோ (8)
அண்டர் பேரில் சண்டை செய்தால் அன்னை வருவா
என்று ராமன் தன்னை தேத்த ஸ்ரீராகவனுமக் கானில்
சென்று ஸீதை தன்னைத்தேட ஸ்ரீதரன் வந்தாரே (9)
ஸீதை தன்னைத் தேடித்தேடி திரிந்துவருங்காலை
பாதையினில் ஜடாயுவை பார்த்தவரும் வேர்த்தார் (10)

10-வது இராகம்-கற்பதருவை

தந்தையைக் கண்டு தர்பரனப்போ
விந்தையாய் மேல் விழுந்துரிகினனே
மைந்தனே எனக்காக மனது உருக வேண்டாம்
மைதலி தனைத் தேடாய் ராமா (1)

நங்கையாம் ஸீதையை லங்கையை யாளுகிற
ராவணன் கொண்டு சென்றான்
பங்கமில்லாமலே பகைவர்களை வென்று
பார்மகள் சிறைமீட்பாய் ராமா (2)

இந்த விதமாய் உரைத்து ஜடாயுவும்
ஏகினன் வைகுந்தம் தன்னிலே
தந்தைக்குரியதெல்லாம் தாமோதரன் நடத்தி [தில்
வந்தாரே கானகத்தில் தம்பியுடன் (3) வந்தாரே கானகத்

பௌவத்தில் சயனித்த பரம புருஷன்
பன்னகனுடன்கூட அவ்வழிவருகையில்
கவந்தனுக்கு முத்தி அருளுடன் கொடுத்தனனே
கவந்தன் அன்புடன் ஸ்துதித்திடுவான் (4)

ஆதி அனாதியாய் அகிலமெங்கும் நிரைந்து
அனைத்தையும் காப்பவனே ஏது மறியாது போல்
இந்த வேஷம் கொண்டது என்ன காரண மையனே ராமா
இப்படி நடிப்பதென்றான். (5)

நீ செய்யும் மாயைகள் ஈசனாதியருக்கும்
பேசுவ தெளிதாமோ சாச்வதனே எந்தன்
சாபந்துடைத்தாய் இங்கு
சபரியைக் கண்டிடுவாய் என்று
சத்யலோகம் சென்றான் (6)

அவ்வழி சென்று சபரியைக் கண்டு
அவள் தரும் கனி உண்டு சபரிமொழிக்குகந்து
ஸாயுச்யபதமீந்து பௌவம்போல் வடிவுடைய ராமன்
பம்பாதீரம் அடைந்தான். (7)

கிஷ்கிந்தா காண்டம்.

(1) இராகம்—தோடி.

சபரி சொன்ன வழியே ராமன் தம்பியுடன் வந்திட
அவ்விடந்தனில் ஸுக்ரீவன் அநுமனை அனுப்பிட (1)
வீரரே நீர் யாவரென்று மாருதி வினவிட
ஊரைவிட்டு தாய்பிரிந்த உண்மை தம்பி செப்பிட (2)
சீலனஞ்சநேயனும் தன் நீளும் உருக் காண்பித்து
வாலியால் ஸுக்ரீவன் படும்வாதையை விளம்பியே (3)
சென்று ஸுக்ரீவனுக்கிவர் சேதிசொல்லி அழைத்திட
நன்றென்று ஸ்ரீராமன் பாதம் ராஜனும் வணங்கிட (4)
கண்டு ராமன் ஸுக்ரீவனை கரத்தினால் அணைத்துமே
வென்று தருவேன் உன் ராஜ்யம் என்று ராமன் உரைத்
துமே. (5)
கதிரவன் மகன் தம்பி லெக்ஷ்மணர் அநுமானுடன்
மதங்கமுனிவன் மலையில் மாதவன் இருந்தனன் (6)
ஸீதையின் அணியைக் கண்டு நீதியுள்ள தம்பி தேற்ற
செல்வன் மிகத் தேர்ந்தனன் நிர்மலனிருந்தனன். (7)
பத்மநாபன் அடிபணிந்து பாநுபாலன் உரை செய்வான்
ஸப்தமரம் எய்தா லெங்கள் ஸந்தேகந் தீருமென்றான் (8)
இந்தவிதம் ராஜன் சொல்ல ராமன் அம்பு எய்திட
துந்துபி எலும்பை தம்பி தூக்கி வானில் எறிந்திட. (9)

(2) கட்டம் ராமமுகீப்ரணதபால்.

அன்புடனே ஸுக்ரீவனும் அய்யன் ராமனை வணங்கி
முன் பிறந்தானெடெதிர்க்க மூர்க்கமுடனே இணங்கி (1)
சுக்ரீவனைக் கண்டு மப்போ சிந்தை சந்தேகம் கொண்டு,
அயக்ரீவனும் சிவந்தமாலை, அவன் மார்பில்
சூட்டக்கண்டு (3)

வாலியும் சுக்ரீவனும் மாரிச்சண்டை செய்ய நின்றான்.
மாயன் ராமபாணந்தன்னை வாலி மார்பில் எய்து
நின்றான். (4)

கண்டு வாலி பாணந்தன்னை
கரந்தன்னிலே தான் பிடித்து
பண்டு பாரளந்தவனை
பாரத்தவனு முறைத்திடுவான். (5)

மானிடனே என்னை நீயும்
வஞ்சித்துக் கொல்ல நினைத்தாய்
கானில்வாழு மெங்களுக்கும்
காவலர்க்கும் சண்டையுண்டோ. (6)

என்றுவாலி ராகவனை
நிந்தனையாய் பேசிடவே
நன்றென்று ஸ்ரீராமன்
கபிராஜனைப் பார்த்துரைத்திடுவான். (7)

உந்தன் முன்னே வந்தேனானால்
எந்தன் பாதத்தில் பணிவாய்
பின்புன்தனனு ஜனுக்கு
பேசிய சொல் தப்பா மென்று. (8)

இஷ்டமான தம்பிதனக்
கிம்சைமிகச் செய்துவந்த
துஷ்டனான வுன்னை நானும்
தூரநின்று வென்றேனென்றார். (9)

அய்யனிது சொன்னவுடன்
அங்கதன் சுக்ரீவனுக்கு
உய்யும் வகையை யுரைத்து
உத்தமனைப் பார்த்துரைப்பான். (10)

ஹீனத்தினல் முன்னுரைத்த
என்பிழை பொறுப்பாயென்று
ஞானத்தினலே துதித்து
நற்பதமடைந்தாய் நன்று. (11)

3. நோட்டு.

சுந்தரியாள் தாரை வந்துவிசனித்தாள்
அந்தவேளை அய்யன்கபி யரசனேடுரைப்பான்
உன்தன் தமயனுக்கு உரிமை நடத்திடென்ன
அந்தக்ஷணம்நடத்தி ஹரியின்முன் வந்து நின்றான். (2)
தம்பியையழைத்து எம்பிரானுரைப்பார்
அன்பனிவனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்யுமென்ன
அம்புலித் தோழனேடருமையாம் பாலனுக்கு
சம்பரம சபைதனில் தரித்தனர் கிரீடத்தை. (3)
மாரிகாலம் சென்று வருவேனென்று
தாசரதி பாதம் வாலிதம்பியும் பணிய நின்று
மாசற்ற மன்னனுடன் மாதவன் விடைபெற்று
மதங்க முனிமலையில் வந்தவரிருந்தார். (4)
மானிலத்தில்மெல்ல மாரிகாலம்செல்ல
வானவர்கோன் தம்பியுடன் வருத்தத்தோ டுரைப்பார்
பானுகுமாரனின்னமேன் வரவில்லை இப்போ
பார்த்துவா வென்றுரைத்து பரந்தாமன் விடுத்தான். (5)
மிக்ககோபங்கொண்டு வெய்யோன்மகனைக் கண்டு
காகுத்தனுரையிதென்று கழறினன் தம்பியுமன்று
மதுபானம் மயங்கிய வானரன்வணங்கியே
மதுவினல் வந்தவகை மோசமென்று. (6)
அவர்கோபம் தணித்து அனுமானை யழைத்து [னுரைக்க
எழுபது வெள்ளஞ் சேனை இங்கழைத்திடு மென்றரச

நன்றென்று மாருதி குன்று போல் கபிகளை
கூட்டமா யழைத்தான். (7)

(4) வேகமுடன் கூடி நாரதரோடி வந்தார்.

சேனைகளைக் கண்டு
ஸ்ரீதரன் மகிழ்ந்தாரடி
வானவர் துயரம்தீர அவதரித்த
மாதவனு மப்பொழுது (1)
அங்கதன் சுக்ரீவன்
நளன்சாம்பவா னுடன்
பங்கயக் கண்ணன் ராமன்
தம்பியோடு படைகளை பார்த்துகந்தார். (2)
வெற்றியுள்ள வனசன்
குடபன் துமிதனோடு
முத்திசைக்கும் வீர
முள்ள கபிகளை முகந்தனும் ஏகவிட்டு (3)
அன்ப னனுமானை யபிராமன் கிட்டழைத்து
தென்திசைக்கு நீ போய்
சீதையைக் கண்டுவா
திருவாழி இந்தா வென்றார். (4)
சூரனனுமானும் துணையாய் மூவருடனே
பார் மகளைத் தேட
ஆழி கையில் கொண்டு
பரனடையாளம் சொல்ல (5)
பலங்கொண்ட வனுமான் பருதிபோல் தேடிவர
பிலத்தில் சுயம்பிரபை
யென்றொரு மாது
ப்ரீதியா யழைத்திடவே. (6)
ராமதூத னென்ன நங்கை விண்ணுடைந்தாள்.
ஜானகி யிருப்பிடம்

சம்பாதி சொல்ல
தக்ஷிணக் கடலடைந்தார். (7)
ஜாம்பவன் புகழ மாருதி மகிழ்ந்து
மப்போ ஆம்பிக் கடல்தாவ
ஆழி கையில் கொண்டு
அனுமனவரை யேறினன். (8)

கிஷ்கிந்தா காண்டம் முற்றிற்று.

சுந்தர காண்டம்.

1-வது இராகம் - வருணன் வந்து வாசலெங்கும்

மாருதியும் பாய்ந்துவரும் மார்க்கந் தன்னில்
அங்கார தாரை யென்ப வளை மாயத்தின்பின். (1)
நிழல்பிடிக்கும் கிருகிதனை யனுமான்
கழலினல் தேய்த்துமே கடுகிவந்தார். (2)
பவளமலை தனிலே பாய்ந்து எழில்
தவழும் லங்கை புரியைக் கண்டு வியந்து. (3)
இந்திர லோகமு மிதற்கீடோ வென்று
சிந்தை தனில் புகழ்ந்து செல்வன்வரார். (4)
லங்கணி யெனு மொரு ராக்ஷஸியும்
அங்கனுமானை எதிர்த்து வந்தாள். (5)
பலங்கொண்ட மாருதி சண்டை செய்ய இலங்கணியும்
பரலோகம் சென்றாள். (6)
அன்றரக்கர் குலமுனக் கணுவாகு மென்று
அனுமானை வாழ்த்தியே சொர்க்கம் சென்றாள். (7)
அணு னுழையாத விடங்களிலும்
அனுமானும் தேடி திரிகையிலே. (8)
தாதவிழ் குழலி மண் சோதரியை
மாதாவென பயந்து பின்தெளிந்து. (9)
கையிலை எடுத்த கரத்தானை
அயில்கொண்ட ராம தூதன் கண்டு முனிந்து. (10)

இந்த க்ஷணமிவனை கொல்வே னென்று
வந்த கோப மடக்கி மாருதியன்று. (11)

2-வது அக்ஷய த்வாரகாபுரிவாசன்.

இளையவனது யின்ற அறை எல்லாவற்றையும் கண்டு
மனதில் சினங்கொண்டு
இராகவனைத் தோத்தரித்துக்கொண்டு
மாருதியும் சொன்னான் பண்டு. (1)

இராகவன் நாயகியை மாருதி காணமல்
மன தொன்றுந் தோணமல்
வேகமாக வருகையில்
அசோக வனம் கண்டான். (2)

சிம்சுபா விருக்ஷத்தின் கீழே
சுததியாகிய கூட்ட மத்தியில்
மிக வாட்டங் கொண்ட அம்ஸம் போன்ற
சீதைதனை அனுமானும் கண்டான். (3)

கண்டு மப்போ ராகவன்தன்
காதலிதா னென்று
தூதன் மகிழ்கொண்டு
பண்டுராமன் சொல் வடிவை பாவையிடம் கண்டு. (4)

சித்த முனிந்து மாருதியும்
விருக்ஷந்தனி லிருக்க
அப்ஸரஸுக்கள் நடக்க
பத்துதலை இராவணனும் பாவை முன்னே வந்தான். (5)

லங்கைமன்னன் சீதை தன்னை நாணமுடனேக்கி
பாணியைமேல் தூக்கி
பங்கம் பண்ணு தென்னை என்று
பார்தனிலே வீழ்ந்தான். (6)

ராவணனே உன் சிரசு
பார்தனில் உருள
பார்த்தவர்கள் மருள
ராகவரும் செய்வ ரென்று நங்கை சீதை புகன்ருள். (7)
இப்படியாய் சீதை சொல்ல
லங்கை மன்னன் வேர்த்து அரக்கியரை பார்த்து
மைப்படிக் கண்ணளுக்கு எந்தன்
மகிமை யுரையு மென்ருன். (8)

3-வது இராகம் - இன்னும் வரக் காணேனடி.

அன்னவறும் சொல்லலுமேல் எந்தன் சகியே
அரக்கியர் கூட்டமதாய். (1)
மின்னிடையாள் ஜானகியை
மெத்தவும் வருத்திடவே எந்தன் ஸகியே. (2)
அந்த வேளை விபீஷணன் பெண்
அன்னை தனைத் தேற்றிடுவாள்
கண்ட கனவுதனை ஜானகியே
கன்னல்மொழி மாதே கேளாய் எந்தன் ஸகியே. (3)
லங்கைக் கருகக் கண்டேன்
தெற்கு முகமாய் ராவணனும் போகக் கண்டேன்
இங்கு வந்து ஒரு தூதன் மாதே
உனக்கு இதம் சொல்லி மீளக் கண்டேன். (4)
என்று சொல்ல அனுமானும்
மந்திரத்தை உச்சரித்தான்
கள்ள வரக்கியர்கள்
மெல்ல உறக்கமானர் எந்தன் ஸகியே. (5)
அப்பொழுது சீதாதேவி
ஆருயிர் விடவே யெண்ணி
வள்ளிநிகர்மென் குழையாள்
பூஞ்செடிக் கீழ் மெள்ள வந்து நின்றனளே. (6)

இராகம் வேறு கட்டம் 4-வது ராஜனே உம்மை.

தூதனுமப் போதுரிதமாகவே
சீதை முன்னிலே சேவித்து நின்ருன். (1)
மங்கை சீதையு மனங்கலங்கியே
இங்கு ராக்ஷசர் மாயையோ வென்ருள். (2)
அன்னை யுரைத்திட அனுமானு மப்போ
மன்னன் தூதன் நான் மாருதி என்ருன். (3)
சந்தேகம் வேண்டாம்
தாயே என்றிடச் சிந்தை மகிழ்ந்து தேவி கூறுவாள். (4)
நாதன் ராகவன் நல்லுருவத்தை
ஓதுவாயென உத்தமன் சொல்வான். (5)

இராகம் வேறு கண்டு கொண்டானே பரதன். 5-வது கட்டம்.

ஸ்ரீராமன் திருவழகை தெரிந்தவரை கூற
நேராக மனமுகந்து நேரிழையே கேளாய். (1)
மாராபி ராமன்திருப் பாத வடிவினிற்கு
வாரிஜமும் நேராமோ முற்றுமன சுக்குச்சொல்லப் போமோ.
அம்புருத் தூணிகரோ அழகிய முழங்காலும்
அய்யன் துடையழ குறைக்க ஆமோ ஒருக்காலும்
அம்புயனேடனைத்துலகும் படைத்ததிரு நாபியுடன்
செம்பொந்த கட்டை நிதற்கும் திருவயிற்றின் ஒளியழகும். (3)
மரவுரி தரித்ததிரு மருங்கிருக்கும் நேரும்
மரகதத் தட்டென்ன ஒளி வீசுதிருமார்பும்
திரண்டுருண்ட புஜத்தழகும் திருக்கழுத்தி னமைப்பழகும்
அருள் பெருகும் விழியழகும் அமுதவாயின் மொழி யழகும்.
போரில் வளைசாரங்கம் அய்யன் புருவ மென்னலாமோ
பூர்ண மதிவிளங்கும் திருமுகத்துக் கிணையாமோ
சீர்மலிந்த மேனியுடன் செல்வத்தம்பி யருகருக்க
வீரகோதண்டம் விளங்க வீற்றிருப்ப தென்ன சொல்வேன்.

இந்தவிதம் ராகவன்தன் எழிலுரைத்து அனுமான்
பின்னடந்த செய்தி தன்னை பேசியந்த ஸ்ரீமான்
அன்புடன் ஸ்ரீராமன் தந்த ஆழியைக் கையிலெடுத்து
அன்னை மகிழக் கொடுத்தான் அழியாப் புகழ்படைத்தான்.

இராகம் வேறு. 1

(6-வது) கட்டம் ஸ்ரீராம சந்திரனே.

சீலமிகு ஜானகியும் செல்வன் கணையாழி கொண்டு
சாலவே அனுமானை வாழ்த்திடுவாள் (1)
வாழியஞ் சனுதேவி மைந்தனே
வாயுவளித்த வனுமந்தனே. (2)
ஆழிதந்து எந்தனுட ஆவிதனைக் காத்தவனே
வாழியா யிவ்வுலகத்தில் நீ யிருப்பா யென்று (3)
இவ்விடத்தினில் ஒரு மாதந்தான்
இவ்வுயிரை வைத்திருப்பேன்
என்பிழை பொறுத்திடவே
அவ்விடத்தில் நாதனிடம் நீ யுறையா யென்று (4)
அன்னையுரை கேட்டு அனுமான்
அன்புடனிதமுரைத்து
அந்தவனந்தன்னை யழித்திடுவான் (5)
வானளாவும் விருக்ஷங்களும்
வளரும்பல தோப்புகளும்
மான்போ லனுமான் பாய்ந்திடம் மாரினனே (6)
அந்நந்தவன கிங்கரர்கள்
அதிகாயனை ஜம்புமாலி
பஞ்ச சேனாதிபரும் மாய்ந்தனரே (7)
அறுபது வெள்ளம் சேனை தன்னுடனே
அக்ஷயனும் வந்தெதிர்க்க தக்ஷணமே மாருதியும்
பக்ஷணம் பண்ணியிருந்தான் கம்பத்திலே. (8)

7-வது கட்டம் கோகில நகரி இராகம் வேறு.

கம்பத்தின் மேலிருக்கும் காகுத்தன் தூதனை
வம்பரக்கர்கள் கண்டு லங்கை மன்னனிடத்தில் நாடி
யசோகவனம் பங்கமானதை உரைத்தார். (1)

கயி மாகுத்தவனும் கண்டு மிந்திரசித்தை
கட்டிவா குரங்கை என்றான் அயல்கொண்ட கரத்து
டன் அநந்தம் கோடி சேனையோடு அனுமான் முன்
[வந்தெதிர்த்தான். (2)

இந்திரசித் தெதிர்க்கவே இருதோளும் பூரித்து
இருப்பு முசல மெடுத்து அந்த லங்கை மன்னன்
பாலனை யனுமான் சிந்தை கலங்கவடித்தான். (3)

வசையுடனிந்திரசித்தை மாருதி யடிக்கவே
வானத்தில் பாய்ந்து மவன் திசைமகன் பாணத்தை
தேவர்கள் நடுங்கவே சிலைதனில் பூட்டிவிட்டான்.

சென்றுமப் பாணமும் ஸ்ரீராமதூதனைச்
சேர்த்துப் பிணித்திடவே நன்றென்று ராவணன்
மைந்தனுமப்பொழுது ராக்ஷஸர்களை யழைத்தான்.

அறுபதினுயிரம் அரக்கர் கூடி அட்டகாசம் செய்து
நரபதி தூதனை ராவணன் சபைக்கு
நலிவுடனிழுத்துச் சென்றார். (6)

8-வது கட்டம் மிட்டாய் விருக்குது இராகம் வேறு.

ராகவதூதன் வருகை கண்டு
ராவணன் ஆர்பரித்து, வாகு பூரியுடனிருக்க
அனுமான் வந்தான் சபைதனிலே (1)

அன்னவன் சபையி லனுமான் வரவே
அகன்றது பிரமாஸ்திரம் மன்னு புகழ் ராம
தூதனும் வாலினல் ஆசனமிட் டமர்ந்தான். (2)

கண்டுமே ராவணன் கண்கள் பொரியெழ
கடுகியே மாருதியை இன்று எந்தன் முன்னே
ஈசன்மா லுந்தனை இசைந்து விடுத்தனரோ (3)

தீரனும் மாருதி ராவணனுரைத்ததை
செவிதனில் கேட்டு பின்னே வீரகோதண்டபதி
தூதனுனடா வென விளம்பியே அவனும் சொல்வான்.
அச்சமில்லாமல் அசோக வனந்தன்னை
அழித்தாயடா குரங்கே சிக்ஷை செய்திட வந்த
அக்ஷயனையும் கொன்ருய்
சீக்கிர முரைத்திடென்ருன் (5)
அடடா ராவணு கேளு அனுமானடா வென்றன் பேரு
அயனீசன் விடுக்கவில்லை விடடா சீதையை நீயும்
திருடா ஸ்ரீராமன் முன்னே
விட்டால் பிழைத்திடலாம். (6)
தப்பி பிழைக்க வென்ருல் ஜானகி தன்னை விட்டுச்
சரணம் புகுந்திடுவாய் தப்பினுல் ராகவன் சரமொன்று
உன்தலைதன்னை கென்றுரைத்தார். (7) [போரும்

9-வது கட்டம் மில்லா பீஸ் ஏற்படுத்தினுன் இராகம் வேறு.
மாருதி சொல்லதுமே மயன்மருமகனும் தான் கேட்டு
தீரமுடன் வானெடுத்து தசகண்டன்
சீறியனுமானை வெட்ட வந்தான் (1)
உமைபாகன் போலே உள்ள விபீஷணன்
தமையனிடத்தில் சென்றுரைப்பான் (2)
தூதனை கொல்வேனென்று வந்த
துரிதமாய் வந்த எந்தன் அண்ணவே (3)
பாரினுள்ளோர் நகைப்பார்
இந்த பழிக்காளாக நாமாகவேண்டாம் (4)
குணமுள்ள தம்பி சொல்ல ராவணன்
சினமாறி ராக்ஷஸரை தானழைத்து (5)
ஊரினுள்ள துயில்கள் எல்லாம்
இந்த மாருதிவால்தனில், கட்டு மென்ருன். (6)

ஜய ஜய ராம ராம.

10-வது கட்டம் வாங்கிய பிரசாதம்தனே. இராகம் வேறு.

கேட்டுமவ் வரக்கர்களும் கீர்த்தியோன் தனைப் பணிந்து
நாட்டமாய்த் துயில்கள் எல்லாம்
ராமதூதன் வாலில் சுற்றினர் (1)

ஆயிரமகலம் எண்ணெயை ஆஞ்சனேயன் வாலினில்
நேயமாயரக்கர்களும் நிமிஷத்தில் தீமூட்டினரே (2)

ராமதூதனப்பொழுது வாலினலரக்கர்களைப் பூமிதனில்
ஏற்றி லங்கை பூமன் பார்க்க நின்றனன் அப்போ (3)

வன்னிபோல் தீண்டொணுத மகிமை வாய்ந்த மைதிலியும்
வன்னியை ஸ்தோத்தரிக்க மாருதி வாலில் குளிர்ந்தனன் (4)

லங்கை எழுந்தாரூசனே ராவணன் மரஸ்தலமும்
மங்கை மர மொன்றொழிய மாருதி தீயால் தகித்தனன் (5)

ராவணனு மப்பொழுது மேகந்தன்னில் போயொளிக்க
ராமதூதன் சந்தோஷமாய் நங்கை சீதை முன்னிலே வந்தான்

இராகம் வேறு தெள்ளுதமிழுக்குதவும் வேலா

11-வது கட்டம் காவடிச்சிந்து.

கடல்தாவ ஆஞ்சநேயன் அப்போ
காரிகையாளிடம் விடை கேட்டான்
கடல் போன்ற கண்ணுளும் திடமுடனே மனதில்
அடையாளமாக சிவ வசனம்
அறைந்திட அனுமானும் பகர்வான் (1)

துஷ்டனிந்த ராவணன் தன் ஊரை
எட்டு நாளில் பாரு மிதன் சீரை
மட்டில்லாத வானரர்கள் எட்டுத் திக்கிலும் நிறைந்து
அட்டகாசம் செய்வதினி யார்க்கும்
அய்யன் கோதண்டத்தொனி கேட்கும் (2)

சிந்தை வருந்தாதீரென்று தேற்றி
சேவடிதனில் விழுந்து போற்றி
தந்திடு சூடாமணியை தன் கரத்திலே பிடித்து
தென் திசையை விட்டு வழி நாடி
ஸ்ரீராமன் கீர்த்திதனைப் பாடி (3)

மாருதியும் வேகமுடன் வந்தான்
ஆழிதாண்ட விச்வ ரூபங் கொண்டான்
வாருதியைத் தாண்டி அவர் மகேந்திரகிரிதனிலே
வந்து சேனைகளுடன்கூட மதுவனந்தனிலவன் நாட (4)

சந்தோஷமாய்க் கனிக்காயுண்டு வந்தொரு கபிகளைக்கண்டு
அந்த வனத்துக்கதிபன் ததிமுகன் வந்ததெதிர்க்க
வாலிமைந்தன், நிந்தனை பேச அவன் சென்றான் (5)

ராகவனும் தென்திசைக்கு சென்ற
மாருதி வரவு காணேனென்று
தாகமுடன் தானிருக்க வேகமுடன் மாருதியும்
சோகந்தன்னைத் தீர்த்திடவே வந்தான்
ராகவனடிதனில் படிந்தான் (6)

கண்டேன் சீதையை ரகுநாதா
கண்டோர் வினைதீர்க்கும் போதா
அண்டருங் காணொணாத அரக்கர் வனந்தனிலே
வண்டார் குழலாள் சீதை தந்த மணியிது
வென்றுரைத்து ஈந்தான். (7)

12-வது கட்டம் ப்யாரப்யார ஸையா இராகம் வேறு.

சூடாமணி கண்டான் ராமன் சூடாமணி கண்டான் ராமன்
வாடாமலர் சூடும் மைதிலியாருட மாரில் புரள் அணியான (1)

பாஞ்ச சன்னியம் தரித்த பரந்தாமனப்பொழுது
ஆஞ்சனேயன்தனை ஆகமுடனணைத்து
வாஞ்சையுடன் மாதவனும் (2)

கண்டான் சூடாமணியை கொண்டான் சிரந்தனிலே
வண்டார் குழலாளைக் கண்டதுபோலவே
மாதவனுமப்பொழுது (3)

சேனைகள் சூழ்ந்துவர க்ஷீராப்திநாதனப்போ வானரமன்ன
னுடன் வாரிதிகரையில் மாதவனும் வந்து மப்போ (4)

சுந்தரகாண்டம் முற்றிற்று.

12-13-வது கட்டம் இராகம் வேறு.

யுத்த காண்டம்.

சோமசேகரனருளும் பாலா வேலா

1-வது ஆலிலைமேல் பள்ளிவிட்டு

அயோத்தியில் வந்தான்
சீலந்தமபி யாவரும் சேனை சூழ விருந்தான்
சரணமென்ற விபீஷணர்க்கு அபயமளித்தான் வருணன் மீதில்
கோபமாகி வாளி தொடுத்தான்
அவன் வணங்கி இடமளிக்க அணையைக் கட்டினார்
அலைகடலைத் தாண்டி சுவேத மலையைக் கிட்டினார் (2)
படை மூன்று திக்கிலும் பகுத்து ஏவினார்
கொடியரான ராக்ஷஸரை முடிய வீழ்த்தினார் (3)

அடியுடனே கோதண்டத்தினாலே தாழ்த்தினார்
மாயனிந்திரசித்தன் நாகபாசம் விடுத்தான்
பாயும் பக்ஷிராஜனதை வந்து கெடுத்தார் (4)

நாசனவன் பின்னும் பிரமபாச மேவினான்
நேசன் மாருதிசஞ்சீவிகொண்டு தாவினான் (5)

யாவரும் நித்திரை தெளிந்தார் ராவணன்
தம்பியும் ராமனாலே விழுந்தான் (6)

2-வது கட்டம் இராகம் வேறு.

மாதுமிக வருந்தி யப்போ மன்னனை அதிகாயன் இந்திர சித்து
மூல பலமும் சதிசெய்யும் மகோதரன்
சைன்ய பலமும் அத்தனையும் கோதண்டத்திற்
கற்பணமாக்கி பித்தன் மலை தூக்கிய
ப்ரசித்தியும் போக்கி (2)

வீரனை ராவணனும் போரில் விழுந்தான்
நாரதாதி முனிவர் மலர் மாரி பொழிந்தார்
உரிமைக் கடன் யாவையும் விபீஷணன் செய்தான்
அரசை முடிசூட்டி அய்யன்
அனுக்கிரகஞ் செய்தார் (3)

அன்னைதனை மாருதியழைத்தோடி வந்தார்
மின்னிடையும வன்னியினில் மூழ்கி எழுந்தாள்
தாசரதி இளைஞனையும் தசரதன் கண்டார்
மாசற்ற தன் மருமகளை வாழ்த்தியே
சென்றார். (4)

ஜானகியும் அனயனை தம்பியுடனும் சேனையோடும்
புஷ்பகத்தில் செல்வ னேத்தினன்
திருவணையின் மகிமைதனை தேவிக்கு கூறி
பரத்துவாச னச்ரமத்தில் வந்திளைப்பாறி (5)

அன்பன் குகனைக் கண்டு அனுமானை கூவினன்.
தம்பிக்கு தான்வந்த செய்தி சாற்றினன்
காய்ந்தெரியும் அக்னியைச் சூழ்ந்து பரதன்
பாய்ந்திடும் போதினில் எதிர்பாய்ந்துமே வந்தான்
போன உயிர் மீண்டுடலில் பொருந்தினாற்போல
தேனைவென்ற சொற்களினால் செப்புவானப்போ. (6)

3-வது கட்டம் இராகம் வேறு

சகுந்தலையுட வசனத்தைக் கேட்டு துஷ்யந்த ராஜன்
வந்து விட்டான் பரதராஜனே
ராமனிதோ வேகமதாய்
வந்து விட்டான் மோதிரமிதோ (1)

ராவணாதியரக்கரை வென்று
பரத்வாசன் ஆச்ரமத்தில்
தேவிதம்பியோடு இருக்கிறான் (2)
பார்த்திருப்பான் பரதன் மார்க்கத்தைத் தவறிடிலோ
உயிர்விடுவான் சீக்கிரம் நீ சென்றுவா
வென்றார் (3)
செய்தியிது மனம்வருந்தாதே சென்று வரேன்
என்றுரைத்து அய்யன் முன்னே வந்துநின்றனன் 4
மாருதியை வாழ்த்தி ராகவன்
அருந்தவன் செய் விருந்துகந்து
யாவரும் போற்றி வந்தனர் (5)
தாயார்களின் பாதம் பணிந்தான்
தம்பியுடன் பரதன்வந்து ராகவனை வணங்கி நின்றனன்
அனைவர்களும் உள்ளம் பூரித்தார்
நாளை முடிசூட வென்றே நகரத்தினை
அலங்கரித்தார் (7)
மகுட மண்டபம் தம்பியுந்தான்
பரதனப்போ வசிட்டருடன் ஜெகம் புகழவே
சிங்காரித்தான் (8)

4-வது கட்டம் இராகம் வேறு நோட்டு

மகுடாபிஷேகம் கொண்ட மகிமையை நான் கூறுவேன்
ஜெகநாதனும் ராமன்
சிங்காசன மிருந்து (1)

தேச தேச மன்னர்களும்
தெளிந்த பெரியோர்களும்
தேவர் முனிவர்களும்
நேசத்துடன் சேர்ந்திருக்கும்

ரத்னமணி மண்டபத்தில் (2)
அன்புடைய தம்பியர்கள்
அருகிருந்து உபசரித்திட
அம்பு விழி சீதையுடன் அய்யன் ராமன்
மன மகிழ்ந்து (3)

அகஸ்த்யர், கண்வர், பரத்வாஜரும்
அத்திரி சதாநந்தரும்
சுகநாரதவ்யாஸ ஸௌமய
சூதராதி ஆசி கூற (4)

அந்தணர்கள் வேதசாஸ்திர முழங்கிட
அருந்ததி கணவன்கையில்
ஆணிவைரத்தாலிழைத்த (5)

தங்க கலசங்களில்
கங்கை யமுனை துங்கபத்திரா
காவேரி நதி தீர்த்தமும்
கொண்டு மணிமுடியில்
வசிட்டர் சேர்க்க (7)

தேவதுந்துபி முழங்க
ஜெகமெங்கும் புகழ்ந்திட மூவருக்கும் மூலஜோதி
மூர்த்தியான பரஞ்சோதி [மகுடாபிஷேகம்]

5-வது இராகம் வேறு.

மங்களம் மங்களம் ஜெய மங்களம் மங்களம் (1)

மாருதிக்கு பொங்குபுகழ் ராமபூபதிக்கு
மங்களம் மங்களம்
பானுகுலம் வந்த தீன சரண்யன் ஜானகிராமனுக்கு
வானவர் துயர்தீர்த்து ரக்ஷித்த மாதவராமனுக்கு (2)

கல்லைப் பெண்ணாக்கி மிதுலையில்வந்த கல்யாணராமனுக்கு
தொல்லைகள் தீர்ந்து வேள்விமுடித்த சுந்தர ராமனுக்கு 3
பட்டாபிஷேகம் பெற்று மகிழ்ந்த பட்டாபிராமனுக்கு,
இஷ்ட தம்பியர்தேவியோடிருந்தஇரவிகுலசோமனுக்கு(4)

மூதண்டம் வென்றிடும் கோதண்டமேந்திய மூர்த்தியனாதனுக்கு
ஓதும் பரத லக்ஷ்மண சத்துருக்கன சீதா சமேதனுக்கு 5

லங்கைக்கிறைவன் குகன் சுக்ரீவன் மகன் நற்றுணைவீரருக்கு
தங்கிடு மன்னை வசிட்டசுமந்திரன் ஜாம்பவ தீரருக்கு 6

கோசலை யாதியதாயரோடு அயோத்திதேசத்திலுள்ளவர்க்கும்
தாசரதிகதைப் படித்ததைக் கேட்டு சந்தோஷிக்கும்
நல்லவர்க்கும் (7)

மங்கையர், மாமுனி சேனைகாதியர் மதிகதிர் புள்ளுடனும்
மங்கை நகரினில் வந்த தெய்வநாதன் மாதாவர
மங்கைக்கும் (மங்களம்)

யுத்தகாண்டம் முற்றிற்று.

(ஸ்ரீமத் ராமாயணக் கும்மி ஸம்பூர்ணம்)

600 008

கீர்த்தனம்—ஸாவேரி

வந்தெனை யாதரிப்பாய் - ஸ்ரீவரமங்கை - எனதுயர் பரிகரியாய்

அநுபல்லவி.

ஸ்ரீ வானுஜல முனயேநமா:—பூபாளம்

பத்மலோசன-பத்பதேசனு-பத்மவாசினி நாயகா-பத்மனை
முனம்-பெற்றெடுத்தவா-பத்மனுப நமோ நமோ 1

அரன் அயன் பணிபாதனே-ரெகுநாதனே குழைக்காதனே
ஸுரர்களுக் கமுதளித்த போதனே-சுயம்பிரகாச நமோ நமோ 2

கங்கை தங்கிடும் தாளனே-கருணாளனே-கிருபாளனே
மங்கை கோபியர்-மகிழ் மணாளனே-வாஸுதேவ நமோ நமோ 3

முன்னம் பிரும்மனுக்கு-ஈந்த வேதத்தை-முடிகி அஸுரர்கள்
கவர்ந்திட பின்னெவென் றுபதேசம் செய்திட்ட அன்ன ரூப
நமோ நமோ 4

கஞ்சன் ஏவலால்-வந்த பூதகி-கடிகி உந்தனை எடுத்திட வஞ்சகீ
அவன்-துஞ்ச உண்டிட்ட-கஞ்ச நேத்ர நமோ நமோ

பண்டு பக்தர்கள் தொண்டு புரிந்திட்ட-புண்டரீகனை ஆண்டவா
உண்டு நீ எனக்கென்றவன் துயர் பண்டு தீர்த்தாய் நமோ நமோ

ஹரிஹரி நமோ நாரணு வென்ற-சிறுவன் தன்னை இம்ஸித்த
தால் பரிவுடன் நரஸிம்மனுய் வென்ற-வாரிஜாக்ஷ நமோநமோ

தினகரன் குலத்துதித்து தேவர்கள்-சிறுமைதன்னை ஒழித்திட
கனமுடன் தசகண்டனை வென்ற-காகுஸ்தாய நமோ நமோ 8

மானிலம்தனில் எம்மை-ஆண்டிட- மங்கை ஸ்ரீவரமாதோடும்
தேனுவாவிய வானமாமலை தெய்வநாத நமோ நமோ 9

ராமராம ரெகுநாதனே னனினுமலரும் பரந்தாமனே

ஸற்குருவே துணை

பூபாளம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.